பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 20 புதன்கிழமை 05.08.2020 கதிர் 269

### இது ரகசியம் அல்ல!

‘தேர்தல் மாரி நேற்றிரவே தொடங்கி விட்டது’.

தேர்தல் என்றால் விளங்குகின்றது, அது என்ன ‘தேர்தலை மாரி’ என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகின்றது.

தேர்தலை ஒட்டிப் பொழியும் மழைதான் அது. பக்கம்02 »

வாக்களிப்பதைத் தடுக்க முடியாது

## குழப்பவாதிகளுக்கு எதிராக நிச்சயம் கடும் நடவடிக்கை!

### மஹிந்த தேசப்பிரிய எச்சரிக்கை

வாக்களிப்பு மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவரும் தடுக்கவே முடியாது. பொதுத் தேர்தல் தினத்தில் வாக்களிப்பதைத் தடுத்துக் குழப்ப நடவடிக்கைகளில் எவராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. பக்கம் 02 »

## யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை எவரும் அடையாளம் காண முடியாது

### அதனால் அச்சமின்றி முழுச் சுதந்திரமாக வாக்களியுங்கள் என ‘பவ்ரல்’ கோரிக்கை

PAFFREL



கொழும்பு,ஓக 05

தேர்தலின் போது வாக்காளர் ஒருவரால் அளிக்கப்படும் வாக்கு யாருக்குப் போடப்பட்டுள்ளது என்பதை யாராலும் இனம் காணமுடியாது. அப்படி இனங்காணலாம் எனக் கூறப்படும் பிரசாரங்கள் உண்மைக்கு புறம்பானவை. அதனால் பக்கம் 02 »

# இன்று தேர்தல்!

## 225 பேரைத் தெரிவு செய்ய 7,452 பேர் களத்தில் குதிப்பு




கொழும்பு. ஓக. 05

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது.

‘கொரோனா’ வைரஸ் பரவலால் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இந்தத் தேர்தல் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சுகாதார நடைமுறைகளுடன் இன்று நடைபெறுகின்றது.

தேர்தலுக்கான வாக்களிப்பு நாடு முழுவதும் 12 ஆயிரத்து 985 வாக்களிப்பு நிலையங்களில் காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

அதற்கிணங்க 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 874 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். பக்கம் 02 »

## வாக்களிப்பது கடமை; இல்லையேல் மடைமை

### பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவிப்பு

வாக்களிப்பது அனைவரினதும் கடமை; வாக்களிக்காதிருப்பது மடைமை.

– இவ்வாறு வவுனியா மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்த ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆள்பவனை தீர்மானிக்க வேண்டியது ஆளப்படுபவனே. அவ்வாறு தீர்மானிப்பதற்கு உள்ள ஒரே ஒரு வாய்ப்பு தேர்தலே.

அந்தத் தேர்தலில், உங்களிடம் உள்ள பக்கம் 02 »

## மேலும் அறுவருக்கு நோய்த் தொற்று

இலங்கையில் மேலும் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சவுதிஅரேபியாவில் இருந்து வருகை தந்த 6 பேரே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று பக்கம் 02 »

## துப்பாக்கிச்சூடு நடத்த பொலிஸுக்கு அதிகாரம்

நாடாளுமன்றத் தேர்தல் வாக்குச் சாவடியில் வாக்குப் பெட்டிகளைக் கொள்ளையிட முயற்சி செய்தால் அல்லது குழப்பத்தை விளைவிக்க முயற்சித்தால் துப்பாக்கிச்சூடு நடத்த பொலிஸாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய பொலிஸ் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

இருப்பினும் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஆயுதமேந்திய தலா இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் இன்று ஈடுபடுத்தப்பட்டிருப்பார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 10 ஆயிரம் கிலோ அரிசி பைகள் கந்தளாய் வீட்டில் கண்டுபிடிப்பு



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடொன்றினுள் இருந்து பத்தாயிரம் கிலோ அரிசி பைகளை நேற்று இரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனக் கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், கெமுனுமாவத்தை பகுதியிலுள்ள வீடொன்றினுள் இருந்தே பத்து கிலோ கிராம் நிறைவுடைய பக்கம் 02 »

## இப்படித்தான் வாக்களிப்பது!

கொழும்பு, ஓக 05

இன்று நடக்கும் தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெளிவூட்டியுள்ளார்.

நீங்கள் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் சின்னத்துக்கு முன்பான புள்ளடியிடுங்கள். வேறு குறியீடுகளை இடவேண்டாம். பக்கம் 02 »

## தேர்தல் விதிமீறல்கள் வடக்கில் 500 ஆகியது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக 05

2020ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் இன்று இடம் பெறும் நிலையில் வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் விதிமுறை மீறல்களின் பதிவு உச்சமாக – 500 ஆக – அதிகரித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் அதிகமானவை யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டத்திலேயே காணப்படுகின்றன. இங்கு 124 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டமையோடு வவுனியா மாவட்டத்தில் 132 முறைப்பாடுகளும், மன்னார் மாவட்டத்தில் 65 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 86 முறைப்பாடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 93 பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்கப்பட்டபடி நேற்று மாலையே அது ஆரம்பித்து விட்டது.

வாக்குச் சாவடிகளுக்கு பக்கத்தில் 'பிட்' நோட்டீஸ்கள் போல வேட்பாளர்களின் சின்னத்தையும் இலக்கத்தையும் குறிக்கும் துண்டுகள் மழை போல ஆங்காங்கே இறைந்து,கொட்டிக் கிடந்தன.

நேற்று மாலையே இந்தப் பணி' தொடங்கி விட்டது. ஏதோ வாக்களிக்கப் போகின்றவர் தாம் யாருக்கு, எந்தச் சின்னத்துக்கு வாக்களிக்கப் போகின்றோம் என்று முடிவு செய்யாமல் குழப்பத்தில் வருபவர் போலவும் –

வாக்களிப்பு நிலையத்துக்குப் பக்கத்தில் வீதியில் குவிந்து கிடக்கும் இந்த 'பிட்' நோட்டீஸ் துண்டில் ஒன்றை எடுத்துப் பார்த்து, அதில் இருக்கும் இலக்கத்துக்கும் சின்னத்துக்கும் வாக்களிப்பதற்குத் தீர்மானிப்பார் என்பது போலவும் –

ஓர் எண்ணத்தில்தான் இப்படிச் சுற்றாடலைக் கஞ்சல், குப்பை போட்டுக் கெடுக்கும் கைங்கரியம் நடந்தேறுகின்றது.

இன்னொரு மாரியும் – மழையும் – உண்டு. அது வெக்கைக்கு மத்தியில் குளிர் நீர் குடிப்பது போன்றது. வறண்ட நிலத்தில் மாரி மழை பொழிவது போன்றது.

தேர்தலை ஒட்டி இன்றும் நாளையும் மதுபான சாலைகளுக்கு மூடுவிழா. அதனால் நம் பெரும்குடி மக்களுக்கு வறண்ட கால நிலை.

ஆனால் நம்மூர் அரசியல்வாதிகள் – தேர்தல் வேட்பாளர்கள் – இந்த வெயில் காலத்திலும், கோடை வெயிலிலும், தண்ணீர் மழை பொழியும் வரத்தை ஈந்தருளியிருக்கின்றமை நம் பெருங்குடி மக்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான விடயம்.

எந்த 'டம்பிங்கில்' இருந்து சரக்கு வருகின்றதோ தெரியாது. கால் போத்தல் கணக்கில் வாரி வழங்கல் நேற்றிரவே தொடங்கி விட்டது. இன்று மாலை வாக்களிப்பு முடியும் வரை இந்த மாரி நில்லாமல் பொழியும்.

தவிரவும், நேற்றிரவே சில இடங்களில் குடும்பத்துக்கு ஐயாயிரம், தனி வோட்டுக்கு இரண்டாயிரம் என்ற பண மழையும் பொழியத் தொடங்கி விட்டது.

இடங்கள், வேட்பாளர்கள் விவரங்கள் உண்டு. எனினும் பல தரப்புகளிலும் இந்தத் தாரளம் அரங்கேறும் போது ஓரிரு வரை மட்டும் அம்பலப்படுத்துவது பொருத்தமானதல்ல.

அதனால் விவரங்களை வெளியிடாமல் தவிர்த்துக் கொள்கின்றேன்.

வேட்பாளர்கள் இறுதி நேரத்தில் மாரி மழையாயப் பொழிகின்றார்கள். ஈந்தருளுகின்றார்கள்.

அவர்களின் வாரி இறைப்பைப் அள்ளிக் கொள்ளும் விளிம்பு நிலை மக்கள் – வாக்காளர்கள் – திருப்பிக் கைமாறாக தமது வாக்குகளை அந்த வேட்பாளர்களுக்கு அளிப்பார்களா? வாரி இறைப்பார்களா?

நாளை மாலையில் முடிவுகள் அவர்களுக்குத் தெரியவரும். அதுவரைப் பொறுத்திருப்போம்.

–மின்னல்–

## இன்று தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கில் 20 இலட்சத்து 71 ஆயிரத்து 527 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இதற்கமைய கிழக்கு மாகாணத்தில் 12 இலட்சத்து 12 ஆயிரத்து 655 பேரும், வடக்கு மாகாணத்தில் 8 இலட்சத்து 58 ஆயிரத்து 872 பேரும் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 3 ஆயிரத்து 682 பேரும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 03 ஆயிரத்து 800 பேருமாக மொத்தம் 07 ஆயிரத்து 452 பேர் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான வேட்பாளர்கள் களம் கண்டுள்ளனர். இதன்படி 19 ஆசனங்களை இலக்குவைத்து அங்கீகரிக்கப்பட்ட 16 அரசியல் கட்சிகளில் இருந்து 352 பேரும், 26 சுயேச்சைக்குழுக்களின் சார்பில் 572 பேரும் தேர்தலில் இறங்கியுள்ளனர்.

பொலனறுவை மாவட்டத்திலேயே குறைந்தளவான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அரசியல் கட்சிகளிலிருந்து 88 பேரும், சுயேச்சைக் குழுக்களில் இருந்து 64 பேருமாக மொத்தம் 152 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

வடக்கு, கிழக்கில் 29 ஆசனங்களுக்காக 85 அரசியல் கட்சிகள், 12 சுயேச்சைக் குழுக்கள் சார்பாக ஆயிரத்து 768 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 07 ஆசனங்களுக்காக 19 அரசியல் கட்சிகள், 14 சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 330 பேர் போட்டியிடுகின்றனர்.

வன்னி மாவட்டத்தில் 06 ஆசனங்களுக்காக 17 அரசியல் கட்சிகள், 28 சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 304 பேர் போட்டியிடுகின்றனர்.

கிழக்கில் 16 ஆசனங்களுக்காக ஆயிரத்து 33 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர். இதில் 49 அரசியல் கட்சிகளும், 70 சுயேச்சைக் குழுக்களும் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்தில் 05 ஆசனங்களுக்காக 16 அரசியல் கட்சிகள் மற்றும் 22 சுயேச்சைக் குழுக்கள் சார்பாக 304 பேர் போட்டியிடுகின்றனர்.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் 07 ஆசனங்களுக்காக 20 அரசியல் கட்சிகள் மற்றும் 34 சுயேச்சைக் குழுக்களின் சார்பாக 540 பேர் போட்டியிடுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 4 ஆசனங்களுக்காக 13 அரசியல் கட்சிகள் மற்றும் 14 சுயேச்சைக் குழுக்களின் சார் பாக 189 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 05 மாதங்களின் பின்னர் பொதுத் தேர்தல் நடைபெறுவது இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக மாறியுள்ளது. வழமையாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 10 முதல் 14 நாட்களுக்குள் வேட்புமனுக்கள் கோரப்படவேண்டும் என்பதுடன், வேட்புமனுக்கள் கோரப்பட்டு ஐந்து முதல் ஏழு வாரங்களுக்குள் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த மார்ச் முதலாம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த போதிலும் திடீரென நாடு கொரோனா வைரஸ் பரவலுக்கு முகம் கொடுக்க நேரிட்டதால் ஐந்து மாதங்களின் பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறுகிறது.

இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கப்போகின்ற நாளாக இன்றைய நாள் மாறியுள்ளது. இன்றைய தினம் வாக்களிப்பு முடிவடைந்ததும் நாளை காலை 8 மணி முதலே வாக்கெண்ணும் பணி ஆரம்பமாகும். முதலாவது தேர்தல் முடிவு மாலை 06 மணியளவில் அறிவிக்க முடியுமென தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது. அன்று நள்ளிரவுக்குள் ஆளப்போவது யாரென்பது தெரியவரும். வேட்பாளர்கள் பெற்றுக்கொள்ளும் விருப்பு வாக்குகள் நாளைமறு தினமே வெளியிடப்படவுள்ளன.

கபே, பவ்ரல் உட்பட பல உள்நாட்டு, சர்வதேச கண்காணிப்பு அமைப்புகளும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளன.

## தேர்தல் விதிமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடுகளுமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 210 முறைப்பாடுகளும் –

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 290 முறைப்பாடுகளுமாக மொத்தம் 500 முறைப்பாடுகள் உள்ளன.

## 10 ஆயிரம் கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் அரிசி பைகளை கைப்பற்றியுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் அவசர தொலைபேசி அழைப்பிற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவ் அரிசி பைகள் கைப்பற்றியுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## குழப்பவாதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: –

கொரோனா வைரஸ் பரவலால் ஒத்தி வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத் தேர்தலை சுகாதார வழிகாட்டல்களுடனும், கடுமையான பொலிஸ் பாதுகாப்புடனும் இன்று நடத்தவுள்ளோம். இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். முக்கியமாக ஒவ்வொரு கட்சிகளின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வாக்களிப்பு மக்களின் ஜனநாயக உரிமை. அதை எவரும் தடுக்கவே முடியாது.

பொதுத் தேர்தல் தினத்தில் மக்கள் வாக்களிப்பதைத் தடுத்துக் குழப்ப நடவடிக்கைகளில் எவராவது ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அதேவேளை, வாக்காளர்களுக்குப் பொதுப்போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதில் கட்சி சார்ந்த எவரும் தலையிட முடியாது.

தாம் விரும்பும் கட்சியையும் தாம் விரும்பும் வேட்பாளர்களையும் சுதந்திரமாகத் தெரிவு செய்யும் உரிமை ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் உண்டு. அதில் எவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாது.

இயலுமானவரை பொதுத்தேர்தல் சுதந்திரமாக – அமைதியாக – நீதியாக நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம் – என்றார்.

## இப்படித்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை விட அதிக புள்ளடிகள் இருந்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.

விருப்பு இலக்கங்களுக்கு வாக்களிக்க விரும்பினால், உதாரணமாக 71 ஆம் இலக்கத்துக்கு வாக்களிக்க விரும்பினால் 71 ஆம் இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

நீங்கள் இன்னுமொரு வேட்பாளருக்கு வாக்களிக்க விரும்பினால் அந்த இலக்கம் 81 ஆக இருந்தால் 81 ஆம் இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

உங்களுக்கு இன்னுமொருவருக்கு வாக்களிக்க முடியும். அந்த இலக்கம் 91 ஆக இருந்தால் அந்த இலக்கத்தின் மீது புள்ளடியிடுங்கள்.

ஆகக் கூடுதலாக மூவருக்கே உங்களால் விருப்பு வாக்கை அளிக்க முடியும்.

ஒருபோதும் உங்கள் விருப்பு வாக்குகளை மூவரை விட அதிகமானவர்களுக்கு அளிக்கவேண்டாம்.

விருப்பு வாக்குகளை அளிக்காவிட்டாலும் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படமாட்டாது. எனினும், கட்சிக்கு அல்லது சுயேச்சைக்குழுவுக்கு வாக்களிக்காமல் விருப்பு வாக்குகளை மாத்திரம் அளித்தால் உங்கள் வாக்கு நிராகரிக்கப்படும்.

முதலில் வாக்கையும் இரண்டாவதாக விருப்பு வாக்கையும் அளிக்க வேண்டும்.

## யாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர்கள் அச்சமின்றிச் சுதந்திரமாக வாக்களிக்கலாம் என 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டிஆராய்ச்சி தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகளில், யார்,எந்த கட்சிக்கு வாக்களித்தார் என்பதை அறிந்துகொள்ளலாம் எனத் தெரிவித்து வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

'வாக்களிப்பு நிலையங்களில் அளிக்கப்படும் வாக்குகளில், யார் எந்த கட்சிக்கு வாக்களித்தார் என்பதைத் தங்களால் அறிந்து கொள்ள முடியும். அதனால் வேறு கட்சிகளுக்கு வாக்களித்து மாட்டிக் கொள்ள வேண்டாம்' – என ஒருசில வேட்பாளர்கள் வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர். குறிப்பாக தேர்தல் பிரசார காலங்களில் தேர்தல் பிரசார மேடைகளிலும் இவ்வாறு பகிரங்கமாக தெரிவித்திருக்கின்றனர். ஆனால் அளிக்கப்படும் வாக்காளர்களின் இரகசியத்தன்மை நூறுவீதம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது. வாக்காளர்களால் அளிக்கப்படும் வாக்கு, யாருக்கு அளிக்கப்பட்டமை தொடர்பில் யாருக்கும் அறிந்துகொள்ள முடியாது.

அவ்வாறு அறிந்துகொள்ளலாம் எனத் தெரிவிப்பது, உண்மைக்கு புறம்பானது என்பதுடன் வாக்காளர்களைப் பயமுறுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் செயலுமாகும். அதனால் அவ்வாறான எந்த அச்சுறுத்தலுக்கும் அஞ்சாமல் வாக்காளர்கள் அச்சமின்றி, சுதந்திரமாகத் தங்களது வாக்குகளை அளிப்பதற்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

வாக்களிப்பு நிலையங்களில் சுகாதார நடைமுறைகளை மிகவும் பாதுகாப்பான முறையில் பின்பற்றுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும், சுகாதாரப் பிரிவினரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் .

வாக்களிக்க செல்லும்போது செல்லுபடியாகும் அடையாள அட்டையை கொண்டு செல்லத் தவறக்கூடாது. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் 2019 வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கலாம். அதற்கான அனுமதியை தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியிருக்கின்றது. – என்றார்.

## மேலும் அறுவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2,834 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 2524 பேர் முழுவதுமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது, 299 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வரும் நிலையில் இதுவரை 11 கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாக்களிப்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக ஆயுதம் வாக்கே. அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி உங்களை ஆளப்போகின்றவர்களை நீங்கள் தெரிவுசெய்வதற்காக வாக்களிக்கும் நிலையத்துக்குச் செல்லாவிட்டால் அதன் கருத்து, உங்களை ஆளப்போகின்றவர்களை நீங்கள் அல்லாது வேறு ஒருவர் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்போகின்றீர்கள் என்பதாகும். அதாவது, உங்கள் உரிமையை நீங்களே மறுக்கின்றீர்கள் என்பதேயாகும்.

ஆகவே, வாக்களிப்பு நிலையத்துக்குக் கட்டாயம் சென்று வாக்கைச் செலுத்த வேண்டும் – என்றுள்ளது.

# நம் வீடுகளை விட வாக்களிப்பு நிலையங்கள் சுத்தமானவை என்கின்றார் கண்காணிப்பாளர்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், ஓக.05

நாம் வசிக்கின்ற வீடுகளை விட வாக்களிப்பு நிலையங்கள் சுத்தமானவை. எனவே மக்கள் எதுவித அச்சமின்றி சுகாதார வழிமுறைகளை பின்பற்றி வாக்களிக்க முன்வாருங்கள் என தேர்தல் வன்முறைகளுக்கான கண்காணிப்பு நிலையம்(சீ.எம்.இ.வீ) கள முகாமையாளர் ஏ.எம்.என்.விக்டர் தெரிவித்தார்.

யாழ் ஊடக மன்றில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் காலம் அறிவிக்கப்பட்டு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட காலப்பகுதியில் இருந்து தேர்தல் நிறைவுற்று ஒருவார கால பகுதிவரை கண்காணிப்பு இடம்பெறும். இலங்கை முழுவதும் நூறு நீண்டகால கண்காணிப்பாளர்களையும், தேர்தல் தினத்தில் 3,000 தேர்தல் தின கண்காணிப்பாளர்களையும் நியமித்து செயற்படுகின்றோம். மேலும் தேர்தல் தினத்தன்று 150 நடமாடும் வாகனங்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

இலங்கை முழுவதும் 1,101 தேர்தல் சட்ட விதிமுறை மீறல்கள், வன்முறைகள் பதிவாகியுள்ளன. கட்சி ரீதியாக பார்க்கின்ற போது பொதுஜன பெரமுன மீது 608 தேர்தல் விதிமுறை மீறல்களும், ஐக்கிய மக்கள் சக்தி மீது 188 தேர்தல் விதிமுறை மீறல்களும், ஐக்கிய தேசியக் கட்சி மீது 67 விதிமுறை மீறல்களும், இலங்கை தமிழரசுக் கட்சி 32, தேசிய மக்கள் சக்தி 33, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி 18, ஏனைய கட்சிகள் 115 ஆகவும் காணப்படுகின்றது.

மேலும் கட்சி ரீதியாக தீர்மானிக்க முடியாத 25 விதிமுறை மீறல் சம்பவங்களும், அரச அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் சம்பந்தப்பட்ட 15 தேர்தல் சட்ட விதிமுறை மீறல் சம்பவங்கள் என ஒட்டுமொத்தமாக 1,101 தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் நேற்று வரை தேர்தல் வன்முறை கண்காணிப்பகத்தினால் காண்காணிக்கப்பட்டுள்ளது.




மாவட்ட ரீதியாக பார்க்கின்ற போது அதி கூடிய தேர்தல் வன்முறைகள் இடம்பெற்ற மாவட்டமாக குருநாகல் மாவட்டம் காணப்படுகின்றது. அங்கு 98 தேர்தல் விதிமுறை மீறல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தில் 42 தேர்தல் விதிமுறை மீறல்களும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 59 தேர்தல் விதிமுறை மீறல்களும், மட்டக்களப்பில் 39 தேர்தல் விதிமுறை மீறல்களும், திருகோணமலையில் 39 தேர்தல் விதிமுறை மீறல்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும் இலங்கை முழுவதும் சட்டவிரோத பிரச்சாரங்கள் தொடர்பாக 367 தேர்தல் விதிமுறை மீறல்களும், வேட்பாளர்கள் மீது 28 தாக்குதல் சம்பவங்களும், அரசு வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பில் 45 சம்பவங்களும், அரசு அதிகாரிகளின் பிரச்சாரம் தொடர்பாக 26 சம்பவங்களும் கண்காணிக்கப்பட்டுள்ளன. மேலும் இம்முறை கோவிட் 19 நெருக்கடிகளால் சுகாதார வழிகாட்டல் மீறல்கள் சம்மந்தமாக 242 சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

ஜுலை இரண்டாம் திகதியிலிருந்து ஓகஸ்ட் முதலாம் திகதிவரைக்குமான காலப்பகுதியில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 1870 மில்லியன் ரூபாவினை தேர்தல் விளம்பரங்களுக்காக செலவிட்டுள்ளன. கட்சி ரீதியாக பார்க்கின்ற போரூபாவில் 903 மில்லியன்சிறீலங்கா பொதுஜன பெரமுனவினரும், 501 மில்லியன்களை ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சி 253 மில்லியன்களையும், தேசிய மக்கள் சக்தி 103 மில்லியன், எங்கள் மக்கள் சக்தி 40 மில்லியன், இலங்கை தமிழரசுக் கட்சி 45 மில்லியன்கள் மேலும் வேறு கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் 25 மில்லியன்களையும் செலவிட்டு இருக்கின்றன.

பிரச்சாரங்கள் நிறுத்தப்பட்ட காலப்பகுதிகளில் யாழ் மாவட்டத்தில் இரகசியமாக தேர்தல் கூட்டங்கள் இடம்பெறுவதாகவும்,கட்சி சார்ந்த வேட்பாளர்களின் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன எனவும் முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

கொவிட் 19 நெருக்கடி நிலவுவதால் உரிய சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இந்த தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். வாக்காளர்கள் போலிச் செய்திகள் எவை என்பதனை அடையாளம் காணவேண்டும். ஜனநாயகத்தின் மிகப்பெரும் பலமான வாக்களிப்பை நிறைவேற்றுங்கள். 15 மாதிரித் தேர்தல்களில் கண்காணித்ததன் அடிப்படையில் நாம் வசிக்கின்ற வீடுகளை விட வாக்களிப்பு நிலையம் சுத்தமானது என கூறலாம்.

வாக்களிப்பு நிலையத்திற்கு வரும்போது வாக்காளர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வரவும். அது தொடர்பான விளக்கங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எந்தவிதமான அச்சமும் இன்றி வாக்களியுங்கள். – என்றார்

# அங்கொட லொக்கா மரணம் தொடர்பில் இலங்கைப் பெண் உட்பட மூவர் கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஓக.05

அண்மையில் உயிரிழந்த போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவர் அங்கொட லொக்கா மரணத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் உட்பட 3 பேரை இந்தியாவில் கோவை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல் கும்பலின் தலைவர் எனக் கருதப்பட்ட அங்கொட லொக்கா, பல்வேறு குற்றச் செயல்களுக்காகத் தேடப்பட்டு வந்த நிலையில், இலங்கையிலிருந்து தப்பிச் சென்று இந்தியாவின் கோவை நகரில், சேரன்மாநகர் கிரீன் கார்டன் பகுதியில் தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளார். அவருடன் மதுரையைச் சேர்ந்த சிவகாமி சுந்தரி மற்றும் கொழும்பைச் சேர்ந்த அமானி தான்ஜி ஆகியோரும் வசித்து வந்துள்ளனர்.

கடந்த ஜுலை 4ஆம் தேதி அங்கொட லொக்கா, உடல்நலக் கோளாறு காரணமாக போலி ஆதார் அட்டையைக் காட்டி பிரதீப் சிங் என்ற பெயரில் கோவை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வேளையில், மருத்துவமனைக்கு வரும் வழியிலேயே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அங்கொட லொக்காவின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பீளமேடு காவல் நிலையத்தில் சந்தேக மரணம் என வழக்கு பதிவான நிலையில் காவல்துறையினர் புலன் விசாரணையின் போது, இறந்து போன நபர் இலங்கையைச் சேர்ந்த மதுமா சந்தனா வசந்தா பெரேரா என்கிற அங்கொட லொக்கா என்பதும், இவனுடன் தங்கியிருந்த அமானி தான்ஜி என்ற பெண் இலங்கையின் கொழும்பு நகரைச் சேர்ந்தவர் என்பதும் அறிய வந்திருக்கிறது.

இதனையடுத்து, மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் போது, கோவையில் தலைமறைவாக இருந்த அங்கொட லொக்காவுக்கும், அமானி தான்ஜிக்கும், இலங்கைக் குடியுரிமையை மறைத்துப் போலி ஆதார் அட்டை எடுப்பதற்கு சிவகாமி சுந்தரியும், அவரது நண்பரான திருப்பூரில் வசித்து வரும் ஈரோட்டைச் சேர்ந்த தியானேஸ்வரன் என்பவரும் போலி ஆவணங்களைக் கொடுத்து உதவியமை தெரிய வந்தது.

போலி ஆவணங்களை பயன்படுத்தி ஆள்மாறாட்டம் செய்ததாக பீளமேடு காவல் நிலையத்தில் புதிய வழக்குப் பதிவு செய்து சிவகாமி சுந்தரி, அமானி தான்ஜி ஆகியோரை சேரன் மாநகர் பகுதியில் வைத்து கைது செய்த காவல்துறையினர், இந்த வழக்கில் தொடர்புடைய தியானேஸ்வரனை ஈரோடு இந்திராநகர் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

மேலும் இலங்கையைச் சேர்ந்த போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவனான அங்கொடா லொக்கா மற்றும் அமானி தான்ஜியுடன், மதுரையைச் சேர்ந்த சிவகாமி சுந்தரிக்கு எப்படி பழக்கம் ஏற்பட்டது? அங்கொட லொக்காவுக்கும் அமானி தான்ஜிக்கும் என்ன தொடர்பு? உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் காவல்துறையினர் விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

# ‘உண்மையான தேசப்பற்றாளர்கள்’ மங்கள ஆரம்பிக்கும் புதிய அமைப்பு

## முடிவுகள் வெளியாகும் முன்னர் வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக.05

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாகும் முன்னர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

கட்சி அரசியல் சம்பந்தப்படாத இளைஞர், யுவதிகளை இணைத்து அரசியல் அமைப்பொன்றை ஏற்படுத்த உள்ளார் என அவர் கூறியுள்ளார்.

உண்மையான தேசப்பற்றாளர்கள் என அந்த அமைப்புக்கு பெயரிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த அமைப்புக்கு பிரபல அரசியல் வாதிகளின் ஆசியும் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்முறை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்திருந்த மங்கள சமரவீர, பின்னர் நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகுகிறார் என அறிவித்ததமையுடன் தனக்கு விருப்பு வாக்கை வழங்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# தேர்தல் அதிகாரிகள் புகைக்க முடியாதாம்

வாக்களிப்பு மத்திய நிலையங்களில் இரவு வேளையில் தங்கியிருக்கும் தேர்தல் அதிகாரிகள் புகைத்தல், மதுபானம் பாவித்தல், வேறு எந்த வித போதைப் பொருள்கள் மற்றும் லைற்றர் முதலானவற்றை எடுத்துச் செல்லுதல் முழுமையாகத் தடைசெய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தல் மத்திய நிலையங்களில் சுகாதார பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருப்பதனால் தேர்தல் கடமைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் மற்றும் வாக்காளர்கள் இது தொடர்பில் எந்தவித அச்சத்தையும் ஏற்படுத்திக்கொள்ள தேவையில்லை என்றும் தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் கண்காணிப்புப் பொறுப்பு இம்முறை உள்ளூர் அமைப்புகளிடம்

நாட்டின் தலைவிதியை - எதிர்கால அரசாங்கத்தை - தீர்மானிக்கும் முக்கிய தேர்தலின் வாக்களிப்பு இன்று நடைபெறுகின்றது.

அதேபோல ஈழத் தமிழினத்தின் எதிர்கால செல்நெறியைத் தீர்மானிக்கப் போகும் தேர்தலாகவும் இது அமையப் போகின்றது.

தென்னிலங்கைத் தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் எப்படி அமையும் என்பது எல்லோராலும் ஊகிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. யார் வெல்வர், யார் அரசு அமைப்பர் என்பவை எல்லாம் மக்களினால் தீர்மானிக்கப்பட்டவையாகவும் அவர்களில் பெரும்பாலானோர் தீர்க்கமாக ஊகித்துக் கொண்ட விடயங்களாகவுமே உள்ளது.

எனினும், அட்சரகணித எண்ணிக்கைப்படி - கணக்குப்படி - எந்தக் கட்சி, எவ்வளவு பெறும், ஏதேனும் தரப்பு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெறுமா, பெறாவிட்டால் குதிரைப் பேரக் கணக்குகளுக்குப் படியக் கூடிய விதத்தில் மாற்றுத் தரப்புகளில் ஆள்கள் இருப்பரா என்பவை போன்றவற்றை இந்தத் தேர்தல் முடிவுகள்தான் தரும். அவற்றை முற்கூட்டியே ஊகித்தோ - தீர்மானித்தோ - யாரும் அறிந்து விட முடியாது.

பெரும்பாலும் நாளை மதியத்துக்குள் பின்னர் இது தொடர்பில் நிலைமை ஓரளவுக்குத் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

தமிழர் தரப்பிலும் 'மாற்று' பற்றிய விடயத்தில் மக்கள் மனதில் மாற்றம் ஏதேனும் இருக்கின்றதா என்பதை நாடி பிடிக்கும் தேர்தலாக இது அமைந்துள்ளது.

ஆகவே, தமிழ் மக்களும் மிகவும் பொறுப்புடனும், நிதானத்துடனும் தங்கள் தீர்மானத்தை இன்று எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலில் ஒரு முக்கிய பின்னடைவு உண்டு.

இந்தத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேச பார்வையாளர்கள் இல்லை.

இதுவரை காலமும் இலங்கையில் நடைபெறும் பொதுத் தேர்தல்கள், ஜனாதிபதித் தேர்தல்கள் போன்றவற்றைக் கண்காணிப்பதற்குப் பொதுநலவாய அமைப்பிலிருந்தும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அது போன்ற பிற அமைப்புகளில் இருந்தும் நூற்றுக்கும் அதிகமான சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் இங்கு பணியில் அமர்த்தப்படுகின்றமை வழமை.

இந்த இரு தேர்தல்களும் - பொதுத்தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் - நாட்டின் மக்கள் தமது இறைமையைப் பிரயோகித்து, வெளிப்படுத்தும் முறைமை என்று நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்புத் தெரிவிக்கின்றது.

அதன் காரணத்தாலோ என்னவோ, இந்த இரு தேர்தல்களையும் கண்காணிப்பதற்கு வழமையான சர்வதேச சுயாதீனக் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. அதன் மூலம் இலங்கையின் ஜனநாயகத்துக்கு சர்வதேச ரீதியில் ஓர் அங்கீகாரமும் கூடக் கிடைத்து வந்தது.

ஆனால், இம்முறைத் தேர்தல் கொரோனாப் பேரிடர் சமயத்தில் சிக்குண்டு விட்டதால் இத்தேர்தலைக் கண்காணிப்பதற்கு சர்வதேசப் பார்வையாளர்கள் வருகை தரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் இத்தேர்தலைப் பார்வையிட இங்கு வருவதாயின் தேர்தலுக்கு முன்னா மிகுந்த நேரகாலத்தோடு அவர்கள் கொழும்புக்கு வந்து இரண்டு வார காலம் தனிமைப்படுத்தலைப் பூர்த்தி செய்த பின்னரே அந்தப் பணியில் ஈடுபடமுடியும்.

இக்காரணத்தினால் சர்வதேச கண்காணிப்பார்கள் இத் தேர்தலைக் கண்காணிப்பது அசாத்தியமாயிற்று.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் இல்லாவிட்டாலும் நமது தேர்தலை உன்னிப்பாகக் கண்காணித்து, சரிபிழைகளைக் கண்டு பிடித்து, பகிரங்கப்படுத்தக் கூடிய உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புகள் நம் மத்தியில் தாராளமாகவே உள்ளன.

வழமை போல இம்முறை அவையும் களத்தில் - தேர்தல் களக் கண்காணிப்பில் - மிக முனைப்பாக நிற்கின்றன. ஆள்களைத் தாராளமாக இறக்கியுள்ளன.

தேர்தல் சமயத்திலும், பின்னரும் இலங்கை அதிகார வர்க்கம் எப்படிச் செயற்படுகின்றது என்பதைக் கண்டறிவதில் அவை கண்கொத்திப் பாம்பாக உள்ளன. அதற்குரிய நிபுணத்துவ வகையிலே அவை செயற்படுகின்றன என்பவை எல்லாம் மனத் திருப்தி தரும் நிலைமையாகும்.

தேர்தல் நடைமுறை தொடர்பில் ஏதேனும் தில்லுமுல்லுகள், குளறுபடிகள் அதிகார மட்டத்தில் நடக்குமானால் அவற்றைக் கண்டறிந்து அம்பலப்படுத்தக் கூடிய நிலையில் அவை இருப்பது வரவேற்கத்தக்கது.

வாக்காளர்களும், கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளும் விழிப்புணர்வுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட்டால் இன்றைய தேர்தலை பெரும் சட்ட மீறல்கள், விதிமுறை மீறல்களுக்கு இடங்கொடாமல் ஒழுங்கானதாக நடத்தி முடிக்க முடியும்.

## 'அக்ஷன் பாம்' தொண்டர்களான 17 பேர் கொல்லப்பட்டு நேற்றுடன் 14 ஆண்டுகள்



மாவிலாறு யுத்தம் தொடங்கப்பட்டு சுமார் நான்கு நாள்களுக்குள் திருகோணமலை மாவட்டத்தை மாத்திரமல்ல, உலக நாடுகளையே கதிகலங்க வைத்த மூதூர் படுகொலையென வர்ணிக்கப்படும் அக்ஷன் பாம் தொண்டர்களான 17 பேர் கொல்லப்பட்டார்கள். (4.8.2006) அவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டு நேற்றுடன் 14 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இப்படுகொலையில் அக்ஷன் பாம் தொண்டர்களான முத்துலிங்கம் நர்மதன், சக்திவேல் கோணேஸ்வரன், ரிச்சட் அருள்ராஜ் சிங்கராஜா பிறீமஸ், ஆனந்தராஜா மோகனதாஸ் ரவிச்சந்திரன், ரிஷிகேசன், கனகரத்தினம் கோவர்த்தனி, கணேஷ் கவிதா, செல்லையா கணேஷ் சிவப்பிரகாசம் றொமிலா, வயிரமுத்து கோகிலவதனி, அம்பிகாவதி ஜெயசீலன், கணேஷ் ஸ்ரீதரன், துரைராஜா கேதீஸ்வரன், யோகராஜா கோடீஸ்வரன், முரளீதரன் தர்மரட்ணம், ஏ.எல். மொகமட் ஜப்பா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மூதூர் பொது வைத்தியசாலைக்கு அருகில் இயங்கிவந்த அக்ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த மேற்படி 17 பணியாளர்களையும் ஆயுதம் தரித்த சீருடைக்காரர்கள் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து நிலத்தில் குப்புறப்படுக்கப் பண்ணி பின்பக்கமாக தலையில் சுட்டுப் படுகொலை செய்தனர் என அன்றைய செய்திகள் தெரிவித்தன

இந்தப்பணியாளர்கள்படுகொலை செய்யப்பட்டபோது தாங்கள் கடமையாற்றும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தை அடையாளப்படுத்தும் சீருடைகள் அணிந்து இருந்ததுடன் நிறுவன வளாகத்துக்குள்ளேயே பல நாள்கள் தங்கியிருந்துள்ளனர்.

மாவிலாறு யுத்தம் மூண்டதன் காரணமாகவும் உக்கிரமான போர் இருதரப்பினருக்குமிடையே வெடித்த நிலையில் வெளியில் செல்ல முடியாமலும் மாற்றார் வந்து பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் நிறுவன வளாகத்துக்குள் சுமார் மூன்று நாள்கள் உணவின்றி, உறக்கமின்றி, பாதுகாப்பைத் தேடமுடியாமல் அடைபட்டுப்போய்க் கிடந்த அவர்களுக்குத்தான் ஓகஸ்ட் 4 ஆம் திகதி அந்தக் கொடூரம் நடந்தது. இப்படுகொலையில் பலியானவர்களில் மணம் புரியாத 4 இளம் பெண்கள், ஏனைய 13 பேரும் ஆண்களாவர்.

இப்படுகொலையைக் கேள்வியுற்ற பல்வேறு சர்வதேச அமைப்புக்கள், மனித உரிமை ஸ்தாபனங்கள், ஆர்வலர்கள், கதிகலங்கிப் போனர்கள். செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, ஐ.நா.வின் அகதிகளுக்கான உயர் தூதரகம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட பல அமைப்புக்கள் இப்படுகொலையை, வன்மையாகக் கண்டித்தன. மனித குலவரலாற்றில் கண்மூடித்தனமான காட்டுமிராண்டித்தனம் என அவை சாடியிருந்தன .

அக்கொடூரக் காட்சியைப் பார்த்த சிலர் "மனித மூளைகள் தரையெல்லாம் சிதறிக் கிடந்தன. மனித சரீரத்தின் உன்னதமான பார்வை மணிகள் பரவிக் கிடந்தன" சம்பவம் நடைபெற்றதற்குப் பின் அழுது புலம்பினர் என் அந்நாளிலே செய்தி வெளியிட்ட ஏடு ஒன்று தெரிவித்திருந்தது.

கடந்த 25 வருடகால வரலாற்றில் இவ்வாறானதொரு கொடுமையான படுகொலை நடந்ததில்லையென பிரான்ஸ் நாட்டில் இயங்கிவரும் பட்டினிக்கு எதிராக செயற்பட்டுவரும் அமைப்பான புளீய் தெரிவித்திருந்தது.

## இந்தியப் பயிற்சியில் கூடுதல் வாய்ப்பு இனி இலங்கைப் படையினருக்காம்!

கொழும்பு, ஓக.05

இந்தியாவில் உள்ள வெளிநாட்டுப் படையினருக்கு பயிற்சி வழங்கும் நிலையங்களில் 50 வீதத்திற்கும் அதிகமான இடங்கள் ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினருக்காக ஒதுக்கியுள்ளதாக கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்காவிற்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய பாதுகாப்பு ஆலோசகர் விகாஸ் சூட் மற்றும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன ஆகியோருக்கு இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, விகாஸ் சூட், ஸ்ரீலங்கா கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்னே, இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

இரு நாடுகளின் பாதுகாப்பு படையினருக்கு இடையில் சம்பிரதாயபூர்வமான நட்புறவை அதிகரித்தல், பாதுகாப்பு ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

## சிறை அதிகாரிகளுக்கும் இனிமேல் கைத்துப்பாக்கி

கொழும்பு, ஓக.05

நாட்டில் சில சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் துப்பாக்கிகள் வழங்குவது எனப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், வெலிக்கட , மெல்கசின், கொழும்பு ரிமாண்ட், நீர்கொழும்பு , பூஸா மற்றும் அகுனுகொலபொலஸ்ஸ ஆகிய சிறைச்சாலைகளின் அதிகாரிகள் மற்றும் புலனாய்வுதுறை அதிகாரிகளுக்கே துப்பாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கூறப்படுவதாவது:–

உயிர் அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ள சிறைச்சாலை அதிகாரிகளுக்கு துப்பாக்கிகளை வழங்கப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பிரகாரம் 9 மில்லிமீற்றர் ரக கை துப்பாக்கிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு துப்பாக்கிகளை பெற்றுக்கொள்ளும் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. – என்று தெரிவிக்கப்பட்டது.







# பழைய இரட்டைத் தட்டு பஸ்ஸில் ஆரம்பப் பாடசாலைக்கு நூலகம்

## ஜனாதிபதி வழங்கி வைத்தார்

கொழும்பு,ஓக.05

மாணவி ஒருவரின் வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் மெதிரிகிரிய சிறிமாவோ பண்டாரநாயக்க ஆரம்ப பாடசாலைக்கு நூலகம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரட்டைந் தட்டு கொண்ட பழைய பஸ் ஒன்றை நவீனமயப்படுத்தி பொருத்தமான வகையில் நூலகமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பாடசாலையை ஆரம்பித்து 05 வருடங்கள் ஆகியும் இதுவரை நூலகம் ஒன்று இருக்கவில்லை. மாணவர்கள் 430 பேரளவில் கல்விகற்று வரும் இப்பாடசாலைக்கு நூலகம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காகப் பல வருடங்கள் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வந்தது.

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மெதிரிகிரியவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தபோது பாடசாலையில் தரம் 03இல் கல்விகற்கும் வினுரி தஹம்ஷா என்ற மாணவி பாடசாலைக்கு நூலகம் ஒன்றை பெற்றுத் தருமாறு ஜனாதிபதி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஜனாதிபதி அவர்களின் பணிப்புரைக்கமைய இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க அவர்களின் ஏற்பாட்டின் மூலம் மஹரகம டிப்போவில் இரும்புக்காக ஏல விற்பனைக்காக வைத்திருந்த இரட்டை தட்டு கொண்ட பஸ் ஒன்று சபையின் ஊழியர்களால் நடமாடும் நூலகம் ஒன்றுக்கு பொருத்தமான வகையில் நவீனமயப்படுத்தப்பட்டது.

நூலகத்திற்கு அவசியமான புத்தகங்களை வழங்குவதற்கு தெரண ஊடக வலையமைப்பின் தலைவர் திலித் ஜயவீர மற்றும் மஹரகம டிப்போ ஊழியர்கள் அனுசரணை வழங்கினர்.

நூலகத்தை வழங்கி வைக்கும் நிகழ்வில் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, அதிபர் சமிந்த பிரியாந்த ஆகியோருடன் மாணவி வினுரி தஹம்ஷா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சம்மாந்துறைப் பிரதேசசபையின் தவிசாளர் நௌஷாட் ராஜினாமா

(காரைதீவு நிருபர் சகா)

சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எம். முஹம்மட் நௌஷாட் தனது தவிசாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.



சமகால அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்பம் காரணமாக தவிசாளர் நௌஷாட் இந்த முடிவினை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்த இராஜினாமா தொடர்பாக ஜனாப் நௌஷாட் கூறுகையில் –

இன்று சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் பதவியை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் உரிமை கோரியதன் காரணமாக தன்மானத்துடன் நான் இந்த ஊரில் அரசியலில் இருப்பதனால் இப்பதவியை அவருக்கு மீண்டும் கொடுத்துவிட்டு மக்களுடன் மக்கள் சேவகனாக இருக்கவிரும்பி எதிர்வரும் 10ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இப்பதவியை இராஜினாமாச் செய்திருக்கிறேன். – என்றார்.

ஜனாப் நௌஷாட் கடந்த உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டினார். கட்சி ஸ்ரீல.சு.கட்சியினருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் காரணமாக ஆட்சியை அமைத்துத் தவிசாளராகத் தெரிவானார்.

சமகால அரசியல் மேடைகளில் மாவட்டத்தை வென்றெடுப்போம் என்ற தொனியில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதுதொடர்பாக அ.இ.ம.காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிசாத் பதியுதீன் சம்மாந்துறை மேடையில் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து அண்மையில் உபதவிசாளராக நியமிக்கப்பட்ட ஆதம்பாவா அச்சிமொகமட் பதில் தவிசாளராக எதிர்வரும் 10ஆம் திகதி முதல் கடமையேற்பார் எனத் தெரியவருகிறது.

# வாக்கு பெட்டிகளுடன் சென்ற பஸ் விபத்தில்!

காலி மாவட்டத்தின் உடுகம தேர்தல் மத்திய நிலையத்திற்கு வாக்கு பெட்டிகளை கொண்டு சென்ற பஸ் விபத்திற்கு இலக்காகியுள்ளது.

நாடளாவிய ரீதியில் இன்றைய. தினம் நாடாளுமன்ற தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ள நிலையில் நேற்றைய தினம் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்கு பெட்டிகளை கொண்டு செல்லும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் வாக்குப்பெட்டிகளை ஏற்றிச் சென்ற இந்த பஸ் காலி – உடுகம வீதியின் ஹியார் பிரதேசத்தில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாக்குப்பெட்டிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸும் ஓட்டோ ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக அக்மீமன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது ஓட்டோவின் சாரதி காயங்களுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பொய் சாட்சியம் வழங்கினாராம் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு எதிராக 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற வழக்கில் பொய் சாட்சியை வழங்கியமை சம்பந்தமாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தின் சப் இன்ஸ்பெக்டர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பிலான – வாஸ் குணவர்தனவுக்கு எதிரான – வழக்கில் பொய் சாட்சி கூறினார் என்றே சப் இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட உள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கைது செய்யப்பட்டு, கம்பஹா நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின், எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# தன் மகளைக் கொலை செய்த தந்தைக்கு மரண தண்டனை!

## நுவரெலிய மேல் நீதிமன்றம் விதித்தது

மகளை கொலை செய்த தந்தை ஒருவருக்கு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி பிரமிலரத்நாயக்க நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

நுவரெலியா – ராகலை ஹல்கன்னோயாவை சேர்ந்த 41 வயதான சோமசுந்தரம் சுரேஷ் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி இரவு தனது வீட்டில் மூன்றரை வயதான சுரேஷ் இந்தியா என்ற தனது மகளின் கழுத்தை நெரித்துக் கொலை செய்த குற்றத்திற்காக குற்றவாளிக்கு இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளியின் மனைவி கடந்த 2014ஆம் குவைத் நாட்டுக்கு வேலைக்கு சென்றுள்ளார். அந்த பெண் மற்றுமொரு இலங்கை நபருடன் மறைமுக உறவை வைத்துக்கொண்டு தனது குழந்தைகளை கவனிக்காது இருந்துள்ளதால், குற்றவாளி தனது மூன்றரை வயதான மகளின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார்.

இந்த கொலை தொடர்பாக ராகலை பொலிஸார் நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

# வாக்களிப்பு நிலையம் அருகில் மாதிரி வாக்குச் சீட்டு விநியோகம்

மொனராகலை - ஹெத்திமலே பிரதேசத்தில் வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள பகுதிகளில் சட்ட விரோதமாக மாதிரி வாக்குச் சீட்டுக்களை விநியோகித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

ஹெத்திமலே பொலிஸ் பிரிவில் உள்ள சில வாக்களிப்பு நிலையங்களுக்கு அருகில் இந்த மாதிரி வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று தினங்களில் நாட்டின் பல பிரதேசங்களில் இப்படியான மாதிரி வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் சம்பவங்கள் நடந்துள்ளன.

இந்த நிலையில் இன்று நடந்த சம்பவம் குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும் அந்த கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.

# கலிபோர்னியாவில் காட்டுத் தீயால் 8 ஆயிரம் பொதுமக்கள் இடமாற்றம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் பற்றி எரியும் காட்டுத்தீயால் ஆயிரக்கணக்கானோர் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், டீசல் டிரக் வெளியேற்றும் சூடான கார்பனால் காட்டுத்தீ ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

லாஸ் ஏஞ்சல்ஸின் கிழக்கே சுமார் 120 கிலோ மீட்டர் தொலைவில் செர்ரி பள்ளத்தாக்கில் கடந்த வாரம் ஏற்பட்ட ‘அப்பிள் பயர்’ என்றழைக்கப்படும் காட்டுத்தீ, ரிவர்சைடு கவுண்டிக்கு பரவி 26 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் எரிந்து நாசமானது.

இந்த நிலையில், பழுதான டீசல் டிரக்கில் இருந்து வெளியேற்றப்படும் சூடான கார்பனால் காட்டுத் தீ ஏற்பட்டிருக்கலாம் என வனத்துறை மற்றும் தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காட்டுத்தீயால் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பெர்னார்டினோ காடுகளுக்கு தீ பரவி உள்ளதாக தெரிவித்துள்ளனர்.





# நாஸா விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாகத் திரும்பினர்

வொஷிங்டன்,ஓக.05

நாசா விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர்.

அமெரிக்காவை சேர்ந்த தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்திற்காக ‘டிராகன் 2’ விண்கலத்தை உருவாக்கியது.

கடந்த மே மாதம் 31 ஆம் திகதி அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி ஏவுதளத்திலிருந்து பால்கன் 9 ராக்கெட் மூலம் பாப் பென்கென் மற்றும் டக் ஹர்லி ஆகிய 2 அமெரிக்க விண்வெளி வீரர்கள் ‘டிராகன் 2’ விண்கலத்தில் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதன் மூலம் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பிய முதல் தனியார் நிறுவனம் என்ற பெருமையை ஸ்பேஸ் எக்ஸ் பெற்றது.


இந்த நிலையில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் 2 மாத காலமாக தங்கி ஆய்வு மேற்கொண்ட நாசா விண்வெளி வீரர்கள் பாப் பென்கென் மற்றும் டக் ஹர்லி ஆகிய இருவரும் தங்கள் ஆய்வு பணிகளை முடித்துக்கொண்டு கடந்த முதலாம் திகதி ‘டிராகன் 2’ விண்கலத்தில் பூமியை நோக்கி புறப்பட்டனர். விண்வெளி ஆராய்ச்சியில் முக்கியத்துவம் பெற்ற இவர்களின் வருகை அறிவியல் உலகில் முக்கிய கவனம் பெற்றது. சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து 19 மணிநேர பயணத்துக்கு பின் மெக்சிகோ வளைகுடாவில் உள்ள பென்சாகொலா கடலில் பாராசூட் மூலம் ‘டிராகன் 2’ விண்கலம் வெற்றிகரமாக நீரில் இறங்கியது.

அதன் பின்னர் விண்கலத்தில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்ட பாப் பென்கென் மற்றும் டக் ஹர்லி ஆகிய இருவரும் கப்பல் மூலம் கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து பூமி வரையிலான அவர்களின் பயணத்தை நாசா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மிகத் தீவிரமாகக் கவனித்து வந்தன. பூமிக்கு வந்திறங்கிய விண்வெளி வீரர்களுக்கு பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்காவில் 45 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக ‘ஸ்பிளாஷ் டவுன்’ என்று சொல்லப்படும் தண்ணீரில் விண்கலம் தரையிறங்குவதை நாசா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

# அப்பிள் நிறுவனத்திடம் காப்புரிமை இழப்பீடு ரூ.10,800 கோடி கேட்கிறது சீன நிறுவனம்



செயற்கை நுண்ணறிவு தொடர்பான தங்களது காப்புரிமையை மீறிவிட்டதாக, அப்பிள் நிறுவனத்தின் மீது சீன நிறுவனமான ஷியோவோ-ஐ (Xiao-i) இழப்பீடு கோரி வழக்கு தொடர்ந்துள்ளது.

சுமார் 10 ஆயிரத்து 800 கோடி ரூபா (இந்தியப் பணப் பெறுமதி) இழப்பீடு கேட்டு இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. உற்பத்தி, பயன்பாடு, விற்பனை மற்றும் இறக்குமதி தொடர்பாக தங்களுக்கு இருக்கும் காப்புரிமையை அப்பிள் நிறுவனம் மீறிவிட்டதாக வழக்கில் கூறப்பட்டுள்ளது.

அப்பிள் போன்களில் பயன்படும் குரல் அங்கீகார தொழில்நுட்பமான சிரி க்கு கடந்த 2009 இல் தங்களுக்கு காப்புரிமை கிடைத்துள்ளதாவும் ஷியோவோ - ஐ தெரிவித்துள்ளது. இந்த தொழில்நுட்பத்தை அப்பிள் நிறுவனம் மீறிவிட்டதாக கடந்த 2012 ல் முதன்முதலாக ஷியோவோ - ஐ இழப்பீட்டு வழக்கு தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# தெரு நாய்க்கு ‘சேல்ஸ் டோக்’ வேலை கனிவு காட்டிய ஹுண்டாய் நிறுவனம்!

## பிரேசிலில் சுவாரஸ்ய சம்பவம்




பிரேசிலில் உள்ள ஹுண்டாய் கார் ஷோ ரூம் ஒன்று டக்சன் பிரைம் என்ற தெரு நாயைத் தத்தெடுத்து, சேல்ஸ்டோக் வேலை கொடுத்து அழகு பார்த்துள்ளது. சேல்ஸ்டோக்குக்குரிய டாக்கை கழுத்தில் மாட்டியபடி, நாற்காலியில் ஒய்யாரமாக அமர்ந்து போஸ் கொடுக்கும் டக்சன் பிரைம் குறித்த செய்தி சமூக வலைத்தளத்தில் செம வைரலாகியுள்ளது.

பிரேசிலில் நாட்டில் Serra என்ற நகரில் ஹுண்டாய் ஷோ ரூம் அருகே தெருநாய் ஒன்று வசித்து வந்தது. இந்த நாய் முதலில் ஷோ ரூம் ஊழியர்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகியது. அதன் பிறகு, ஷோ ரூமுக்குள்ளும் நுழைந்து வருவோர் போவோரிடம் அன்பாகப் பழகியது. அதன் அன்பான நடவடிக்கைகளைப் பார்த்த ஷோ ரூம் நிர்வாகம், இந்த நாயை கௌரவ ஊழியராக நியமித்துள்ளது.

ஷோ ரூமின் ஊழியராக நியமிக்கப்பட்டதையடுத்த அடையாள அட்டையையும் வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஷோ ரூமுக்கு வரும் வாடிக்கையாளர்களை டக்சன் பிரைம் தான் வரவேற்கிறது. வாடிக்கையாளர்களை வரவேற்பது, சேல்ஸ் மீட்டிங்கில் பங்கு கொள்ளும் டக்சன் பிரைமின் புகைப்படங்களைப் இணையத்தில் பகிரப்பட்டு வருகிறது.

தற்போது இந்த நாய்க்கென்று தனி இன்ஸ்டாகிராம் பக்கமும் தொடங்கப்பட்டுள்ளது. இதை 28,000 க்கும் மேற்பட்டோர் பின்தொடர்கின்றனர். ஹுண்டாய் ரோரும் நிர்வாகிகளுக்கும் பாராட்டு குவிந்து வருகிறது.

# தற்கொலை எண்ணங்களைக் குறைப்பதற்கு ஜோன்சன் அன்ட் ஜோன்சன் நாசி தெளிப்பான்

தற்கொலை எண்ணங்களை குறைப்பதற்கு ‘ஜோன்சன் அன்ட் ஜோன்சன்’ நிறுவனத்தின் நாசி தெளிப்பானை பயன்படுத்த அமெரிக்க உணவு மற் றும் மருந்து நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

மன உளைச்சலுக்கு உள்ளானவர்களின் தற்கொலை எண்ணங்களை குறைக்க ஆண்டிடிப்ரசன் மருந்து பயன்படுத்துவது வழக்கம். அந்த வகையில் ஜோன்சன் அன்ட் ஜோன்சன் உருவாக்கி உள்ள ஸ்ப்ராவாடோ நாசி தெளிப்பான், மற்ற ஆண்டி டிப்ரசன் மருந்துகளை விட துரிதமாகச் செயல்படுவதாக அந் நிறுவனத்தின் நரம்பியல் பிரிவுத் துணைத் தலைவர் மைக்கேல் கிராமர் தெரிவித்துள்ளார்.

மன அழுத்தத்தில் இருந்த 6 ஆயிரம் பேர், ஸ்ப்ரா வாடோவை கடந்த ஆண்டு முதல் பயன்படுத்தினர் எனவும் கெட்டமைன் மயக்க மருந்துடன் தொடர்புடைய ஸ்ப்ராவாடோ, மூளையில் உள்ள குளுட்டமேட் அமைப்பில் வேகமாக செயல்பட்டு அவர்களின் தற் கொலை எண்ணத்தை விரைவாகக் குறைத்தது கண்டறியப்பட்டுள்ளதாகவும் மைக்கேல் விளக்கி உள்ளார்.

# பெய்ரூட் அதிர்ந்தது!



லெபனானின் தலைநகர் பெய்ரூட்டை இன்று ஒரு பெரிய வெடிப்பு உலுக்கியது, ஆனால் இந்த குண்டு வெடிப்பு குறித்த சேதங்கள் அல்லது உயிரிழப்புகள் பற்றிய அதிகாரபூர்வ அறிக்கைகள் எதுவும் வெளியாகவில்லை.

பிற்பகலில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு தலைநகரின் பல பகுதிகளில் எதிரொலித்தது. மேலும் நகர மையப்பகுதியில் கருமையாக புகை சூழ்ந்திருந்தது. சில உள்ளூர் தொலைக்காட்சி நிலையங்கள் பெய்ரூட்டின் துறைமுகத்தில் குண்டுவெடிப்பு நடந்ததாகத் தகவல் தெரிவித்துள்ளன.

துறைமுகத்தில் இருந்து நூறு அடி தூரத்தில் உள்ள கட்டடங்கள் சேதம் அடைந்தன எனவும், குண்டுவெடிப்பை அடுத்து நகரத்தில் ஒரு கரும் புகை வெளியேறியதாகவும் அங்குள்ள குடியிருப்பு வாசிகள் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் பலர் காயமடைந்திருக்கலாம் என்று தகவல் வெளியாகி உள்ளது.

# அயோத்தியில் ராமர் கோவிலின் மாதிரிப் புகைப்படம் வெளியாகின

அயோத்தி,ஓக.05

ராமபிரான் பிறந்த இடமான உத்தரபிரதேசத்தின் அயோத்தியில் பிரமாண்டமான முறையில் கோவில் கட்டுவதற்கான பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டு விழா இன்று (புதன் கிழமை) நடக்கிறது.

இதில்பிரதமர்மோடிகலந்துகொண்டு பகல் 12.15 மணியளவில் ராமர் கோவிலுக்கான அடிக்கல்லை நாட்டுகிறார். இந்த விழாவில் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மற்றும் விஸ்வ இந்து பரித் தலைவர்கள், கோவிலின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் ராமஜென்மபூமி தீர்த்த தேரா அறக்கட்டளை நிர்வாகிகள் எனப் பலர் பங்கேற்கின்றனர்.

இந்நிலையில் ராமர் கோயில் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் எப்படியிருக்கும் என்கிற மாதிரி புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த மாதிரி புகைப் படத்தில், கோவிலின் உச்சியில் காவிக் கொடி பறக்க, அழகான கட்ட மைப்புகளுடன் ராமர் கோயில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே கொரோனா மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தலை தவிர்ப்பதற்காக அயோத்தி முழுவதும் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டு வரலாறு காணாத கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரதமர்உள்ளிட்டமிகமிகமுக்கியபிரமுகர்கள் பங்கேற்பதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன.







# பஞ்சாபில் விஷ சாராயம் அருந்தியமையால் பலியானோர் எண்ணிகை 110 ஆக உயர்வு



பஞ்சாபில் விஷ சாராயம் அருந்தியவர்களில் மேலும் 6 பேர் பலியாகினர். இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 110 ஆக அதிகரித்துள்ளது.

அதிகபட்சமாக தரன் தாரன் மாவட்டத்தில் 3 பேரும், பட்டாலாவில் 2 பேரும், அமிர்தசரசில் ஒருவரும் நேற்று உயிரிழந்தனர். இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், 2 தொழிலதிபர்கள் உட்பட மேலும் 12 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

தொடர்ந்து, விஷ சாராய விற் பனையில் முக்கிய குற்றவாளியாகக் கருதப்படும், லூதியானாவைச் சேர்ந்த பெயிண்ட் கடை உரிமையாளர் உட்பட 8 பேரை பொலிஸார் தீவிர மாகத் தேடி வருகின்றனர். இதனிடையே, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 2 எம்.பிக்கள் அம் மாநில ஆளுநரை சந்தித்து, இந்த சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளனர்.

# ஸ்ரீராமர் ஆலயத்திற்கு இன்று அடிக்கல் விழாக்கோலம் பூண்டது அயோத்திநகர்

## பூமி பூஜையில் பிரதமர் மோடி பங்குபற்றுகின்றார்

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான பூமி பூஜையை பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டித் தொடங்கி வைக்க இருப்பதை முன்னிட்டு நகரமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான பூமி பூஜை, அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெற இருக்கிறது. கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் இருப்பதால் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 135 துறவிகள் உள்பட 175பேருக்குமட்டும்அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

மேடையில் பிரதமர் மோடி, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், அறக்கட்டளை தலைவர் நிருத்ய கோபால்தால் மகராஜ், உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் ஆகிய 5 பேர் மட்டுமே இருப்பார்கள்.

பிரதமர் மோடி பிற்பகல் 12.30 மணி அளவில் நிகழ்ச்சி நடைபெறும் ராமஜன்ம பூமிக்கு வருகிறார். அடிக்கல் நாட்டுவதற்கு அடையாளமாக 40 கிலோ எடையிலான வெள்ளியிலான செங்கலை பிரதமர் எடுத்து வைக்க இருக்கிறார்.

பின்னர் பூமி பூஜை முடிந்ததும் அந்த வெள்ளி செங்கல் அங்கிருந்து எடுக்கப்பட்டு விடும். பூமி பூஜை நடைபெறும் இடத்தில் மழை நீர் புகாத வகையில் மிகப் பெரிய அளவில் சாமியானா பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. எல்சிடி திரைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பூமி பூஜைக்கான நிகழ்ச்சிகள் திங்களன்று தொடங்கிய நிலையில், பிற கடவுள்களை வரவேற்கும் விதமாக, நேற்று ராமார்ச்சனை பூஜை நடைபெற்றது.

சரயு நதியை ஒட்டியுள்ள பகுதிகள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கண்ணைக் கவரும் ரங்கோலி கோலங்களும் வரையப்பட்டுள்ளன. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அகல் விளக்குகள் ஏற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாலை மற்றும் இரவு நேரங்களில் தீப ஒளி ஜொலிக்க, அயோத்தி நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

அயோத்தி ராமர் கோவில் பூமி பூஜைக்காக நாடு முழுவதிலும் இருந்து சுமார் 2 ஆயிரம் ஆலயங்களின் புனித மண் மற்றும் 100 நதிகளின் புனித நீரும் அனுப்பிவைக்கப்பட்டு உள்ளன. பூமி பூஜையில் பங்கேற்கும் துறவிகளுக்கு வழங்க சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சார்பில் வெள்ளி நாணயங்கள், ராமஜன்ம பூமி அறக்கட்டளையிடம் வழங்கப்பட்டுள்ளன. பூமி பூஜை முடிந்த பின்னர் உள்ளூர் மக்களுக்கு வழங்குவதற்காக ஒரு லட்சத்து 11 ஆயிரம் லட்டுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பிரதமர் வருகையை முன்னிட்டு, அயோத்தி நகரம் முழுவதும் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. என்எஸ்ஜி எனப்படும் தேசிய பாதுகாப்பு படை கமாண்டோக்கள் உள்ளிட்ட 4 ஆயிரம் பேர், விழா நடைபெறும் பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# மும்பையில் 4 மணி நேரம் விடாது விடிய விடியக் கொட்டிய கனமழை

மும்பையில் நேற்று விடிய விடிய கொட்டிய கனமழை காலையிலும் தொடர்ந்ததால், நகரின் பல பாகங்கள் வெள்ளக்காடாக மாறி உள்ளன. சாலைகளில் ஆறாக ஓடும் நீரால் வாகனங்கள் மூழ்கி உள்ளன. பல இடங்களில் குடியிருப்புகளிலும், வீடுகளிலும் மழை நீர் புகுந்ததால் மக்கள் அவதிக்கு ஆளாகினர்.



நான்கே மணி நேரத்தில் மும்பையில் 198 மில்லிமீட்டர் மழை பெய்து நகரை மூழ்கடித்துள்ளது. கடந்த 2005 க்குப் பிறகு மும்பையில் பெய்த அதிகபட்ச மழை இது என்று மாநில அமைச்சர் ஆதித்ய தாக்கரே தெரிவித்துள்ளார்.

மழையால் தண்டவாளங்கள் நீரில் மூழ்கியமையைத் தொடர்ந்து புறநகர் ரயில் சேவைகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளன. அவசர சேவைகளை தவிர அனைத்து அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் மிக மிக கனமழை பெய்யும் என மும்பை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களுக்கு சிவப்பு அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. தானே, புனே, ராய்காட், ரத்தினகிரி ஆகிய மாவட்டங்களுக்கும் மழை அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

வடமராட்சி கடற்பரப்பில்

# கடலட்டை பிடிக்க தடை கோரிய மனுத் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஓக. 04

நீதிமன்ற உத்தரவை மீறி வடமராட்சிக் கடற்பரப்பில் கடலட்டை மற்றும் சட்டத்துக்குப் புறம்பான தொழில்களில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் பருத்தித்துறை நீதிமன்றினால் இன்று நிராகரிக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இந்த விண்ணப்பம் செய்யப்பட்டது.

தடை உத்தரவை கடந்த வருடம் பெற்றிருந்த நிலையில் இவ்வருடம் மீண்டும் கடலட்டை தொழிலில் ஈடுபடுவதற்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதனை எதிர்த்து மீண்டும் கடந்த மாதம் 19ஆம் திகதி நீதிமன்றில் மீள் தடை உத்தரவை பெறுவதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டது.

இந்த விண்ணப்பம் தொடர்பில் கடந்த வியாழக்கிழமை இரு தரப்பினரது சமர்ப்பணங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் கட்டளை இன்று வழங்கப்படும் என்று தவணையிட்ட நீதிமன்று, வழக்கை ஒத்தி வைத்தது.

வழக்கு இன்று செவ்வாய்க்கிழமை கட்டளைக்காக பருத்தித்துறை நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடற்தொழில் பிணக்குத் தொடர்பில் தீர்த்து வைக்கும் அதிகாரம் முழுமையாக கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு உண்டு.

மேலும் வடமராட்சியைச் சேர்ந்த மூன்று சங்கங்கள் தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை தொழிலில் ஈடுபட அனுமதியை வழங்கியுள்ளன.

அத்தோடு நீதிமன்றக் கட்டளையை மீறி தொழில் இடம்பெறுவது தொடர்பில் விசாரணைகள் சாட்சியங்கள் நீதிமன்றில் முன்வைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம், விண்ணப்பத்தை நிராகரித்தது.



# வயோதிபப் பெண் விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 04

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வேகமாக வந்த ஓட்டோ மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி அடைக்கலநாயகி ஆலயத்துக்கு அருகாமையில் யாழ்நகர் நோக்கி வேகமாக வந்த ஓட்டோ வேக கட்டுப்பாட்டையிழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் வயோதிபப் பெண்மணி ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 8 ஆயிரம் சுகாதார அதிகாரிகள் 69 ஆயிரம் பொலிஸார் களத்தில்

பொதுத் தேர்தல் இடம்பெறும் காலப்பகுதியில் சுகாதார ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக 8 ஆயிரம் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதிகாரிகள் தங்களுக்குரிய பணி இடங்களுக்கு இன்று முதல் அனுப்பிவைக்கப்படவுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், சுகாதார அத்தியட்சகர்கள், நிர்வாக பொது சுகாதாரப் பரிசோதகர்கள், தாதியர்கள், குடும்பநல சுகாதார அதிகாரிகள், நிறைவுகாண் வைத்தியர்கள் அடங்கலாக சுகாதார குழுவினர் தேர்தல் காலத்தில் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் தலா ஒருவர் அல்லது இருவர் வீதம் சுகாதார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் காலத்தில் பாதுகாப்பு கடமைகளுக்காக 69 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்களிப்பு நிலையமொன்றில் இரு பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன், சில பகுதிகளுக்கு இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

# விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் நாடு முழுவதும் நடைமுறையில்!

## பொதுத் தேர்தலை ஒட்டி நடவடிக்கை

நாடாளுமன்றத் தேர்தலுக்கான விசேட பாதுகாப்புத் திட்டம் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகிறது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளை வாக்களிப்பு நிலையங்களுக்கு இன்று எடுத்துச் சென்றபோது கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

"இன்று காலையிலிருந்து தேர்தல் கடமைகள் முடியும் வரை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சோதனைச் சாவடிகள் நாடு முழுவதும் இருக்கும்.

'வாக்குப்பதிவு நாளை காலை 07 மணிக்கு ஆரம்பமாகின்றது. மாலை 5 மணியளவில் வாக்களிப்பு நிலையங்களின் பணிகள் முடிவுக்குக் கொண்டு வரப்படும். அதன்பின்னர் வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துச் செல்லப்படும். இதன்போதும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படும் - என்றார்.

# வியாழன் நள்ளிரவுக்கு முன் தேர்தல் முடிவு வெளிவரலாம்

கொழும்பு, ஓக. 04

தேர்தல் முடிவுகளை 6ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம் விருப்பு வாக்கு முடிவுகளை 7ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னரும் வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கான வாக்கெடுப்பு நாளை இடம்பெறவுள்ளது.

ஒரு கோடி 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் இம்முறை வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கு அமையவே தேர்தல் நடைபெறவுள்ளதாக சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 3652 வேட்பாளர்களும் சுயாதீன குழுக்களைச் சேர்ந்த 3800 வேட்பாளர்களும் போட்டியிடவுள்ளனர்.

22 தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் சார்பில் 7 , 452 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

# எதிர்வரும் 20 ஆம் திகதி புதிய நாடாளுமன்று கூடும்

புதிய நாடாளுமன்ற கூட்டத்தொடரை எதிர்வரும் 20 ஆம் திகதி கூட்டுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி செயலாளர் பீ.பி ஜயசுந்தரவின் கையெழுத்துடன் திங்கட்கிழமை நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது.

அரசமைப்பு மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தில் உள்ள அதிகாரங்களுக்கு அமைய, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்றம் மார்ச் மாதம் 2 ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வானங்கள், பொருள்கள் திருட்டு; 2 பெண்கள் உட்பட 17 பேர் கைது

கட்டுநாயக்க பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்த உடமைகள், வாகனங்களைத் திருடியக் குற்றச்சாட்டில், 2 பெண்கள் உட்பட 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு, அவ்வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள், 3 வாகனங்களையும் இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற போது, வீட்டில் யாரும் இருக்கவில்லையென, விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட சீதுவ பொலிஸார், குளியாப்பிட்டி, உடுபத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை, இன்று நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புபட்ட 13 பொலிஸாரும் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

கொழும்பு, ஓக.04

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரிகளையும், ஓகஸ்ட் 18ஆம் திகதி வரை, தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன, இன்று உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் முன்வைத்த பிணை மனுக் கோரிக்கையை, பிரதான நீதவான் நிராகரித்தார்.

வழக்கு விசாரணைகளின் போது, சந்தேக நபர்கள் மன்றில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

சந்தேக நபர்கள் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும், கொவிட் தொற்றுநோய் காரணமாக இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படமாட்டார்கள் என்றும், சிறைச்சாலை கண்காணிப்பாளர் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

ஹெரோய்ன் மோசடியில் சந்தேக நபர்கள் எவ்வாறு ஈடுபட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் அடங்கிய அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று துணை சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ் தெரிவித்தார்.

இதேசமயம் -

போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய, பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் அதிகாரிகளின் சொத்துக்களை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அதிகாரிகளால், முறையற்ற விதத்தில் சம்பாதித்த பணம் மூலம் சேகரித்துள்ள பொருள்கள், நிதி சலவைச் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கப்படவுள்ளன.

இது தொடர்பான தகவல்களைப் பொலிஸார் சேகரித்து வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இனவாதம், மதவாதத்தைக் கைவிட்டு வேற்றுமையில் ஒற்றுமை காண்போம்

## மட்டு. மாவட்ட சர்வமதப் பேரவை இணைப்பாளர் கோரிக்கை

இந்த நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் வரும் பெறுபேற்றின் அடிப்படையில் கிடைக்கப்பெறும் ஜனநாயக முடிவுகளை மக்கள் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை, தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள் இனவாதம், மதவாதம் கடந்து வேற்றுமையில் ஒற்றுமை காணப் பாடுபட வேண்டும் என தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவை இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

இடம்பெறும் பொதுத் தேர்தல் பற்றியும் அதற்குப் பின்னரான சமூக நிலைமைகள் குறித்தும் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை 04.08.2020 ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாவட்ட சர்வமதப் பேரவை மாவட்டத்தில் இன மத நல்லிணக்கத்தினூடாக ஐக்கியப்பட்ட சமூகத்தையும் அதன்வழி அபிவிருத்தியையும் அமைதியையும் அடைந்து கொள்வதற்கு முயற்சித்து வருகின்றது.

அந்தவகையில் மக்களின் கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், மத சுதந்திரம் என்பனவற்றை மதித்து தேர்தல் நடவடிக்கைளில் ஈடுபடுமாறு நாம் விழிப்புணர்களை அவ்வப்போது வழங்கி வந்திருக்கின்றோம்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற ஓர் அம்சமாக தேர்தல்கள் விளங்குகின்றன.

மனித உரிமைகளின் அடிப்படையில் ஒருவருக்குள்ள விருப்பத் தேர்வையும் அதன் மூலமாகத் தெரிவாகும் மக்கள் பிரதிநிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது.

அதேவேளை தெரிவாகும் மக்கள் பிரதிநிதிகள் எந்தச் சமூக அரசியல் பின்னணிகளைக் கொண்டிருந்தாலும் அவர்கள் இனவாதம், மதவாதம் என்பனவற்றையும் வெறுப்புணர்வுகளையும் விதைக்காமல் சிறந்த சேவையாற்ற முன்வரவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

பிரதேசத்தில் அனைத்து மதங்கள், அனைத்து இனங்களுக்கிடையில் நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய சக வாழ்வுக்கான செயற்திட்டங்களில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள தெரிவாகப் போகும் மக்கள் பிரதிநிதிகள் சிரத்தை எடுக்க வேண்டும். உள்ளுர் சமூகங்களுக்கிடையில் சமாதானத்திற்கான வழிவகைகளைக் கட்டியெழுப்பும் சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன.

பிரதேசத்தில் இன, மத முரண்பாடுகளை பின்புறத்தில் நின்று தூண்டி விட்டு அழிவுகளை ஏற்படுத்தும் அறிவீனர்களாக தெரிவாகப் போகும் மக்கள் பிரதிநிதிகள் இருந்து விடக் கூடாது என்பதே மாவட்ட சர்வமதப் பேரவையின் எதிர்பார்ப்பாகும்.

நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய சமாதான கலந்துரையாடல் செயற்பாடுகளில் அனைத்து இன மதங்களையும் சேர்ந்தவர்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் பங்கெடுக்க வேண்டும்.

யுத்தத்திற்குப் பின்னரான சகவாழ்வு, சமாதானம், அபிவிருத்தி, அரசியல் மறுசீரமைப்பு சம்பந்தமாக அமைதிக்கான பாதையில் அனைவரும் இயங்க வேண்டும்.

பல்லின, கலாசார கலந்துரையாடல்களும் வாத விவாதங்களும், முரண்பாடுகளைப் பேசித் தீர்த்து அபிவிருத்திக்கான இலக்குகளை இணைந்து வடிவமைத்துக் கொள்ளும் புதிய கலாச்சாரமும் உருவாக்கப்பட வேண்டும் – என்றார்.

# புத்தளம் களப்பு பகுதியிலிருந்து மீனவர் ஒருவரின் சடலம் மீட்பு

புத்தளம் களப்பு பகுதியிலிருந்து நேற்று முன்தினம் மீனவர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மணல்குன்றுப் பகுதியைச் சேர்ந்த 41வயதுடைய நபர் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கடந்த 2ஆம் திகதி புத்தளம் களப்பில் மீன் பிடிக்கச் சென்ற தனது தந்தை விடு திரும்பவில்லை எனவும், தந்தையின் தெப்பம் மற்றும் தந்தை எடுத்துச் சென்ற மின்சார டோர்ச் லைட் என்பன களப்பு பிரதேசத்தில் காணப்படுவதாகவும் அவரது மகனால் பொலிஸில் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், குறித்த களப்பு பகுதியில் சடலமொன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சென்ற புத்தளம் பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்தனர்.

குறித்த மீனவரின் பிரேத பரிசோதனை மற்றும் நீதிவான் மரண விசாரணை என்பன நேற்று இடம்பெற்றது.

# இடம்பெயர்ந்த மன்னார் வாக்காளருக்கு புத்தளத்தில் வாக்களிப்பு நிலையங்கள்

இடம்பெயர்ந்த மன்னார் மாவட்ட வாக்காளர்கள், புத்தளத்தில் 12 விசேட வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க முடியுமென, மன்னார் மாவட்டச் செயலாளரும் மன்னார் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்ட வாக்கு எண்ணும் நிலையமான மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# உதவித் தேர்தல் அதிகாரியின் குற்றச்சாட்டு ஆதாரமற்றதாம்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 05

யாழ்ப்பாணம் உதவித் தேர்தல் ஆணையாளர் முறைகேடாக இயங்குகிறார் என உதவித் தேர்தல் அதிகாரி கருணாநிதி குற்றம்சாட்டும் விடயத்தை முழுமையாக ஆராய்ந்த தேர்தல்கள் ஆணைக்குழு எந்த ஆதாரமும் அற்ற குற்றச்சாட்டு எனத் தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டின் மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 150 லட்சம் ரூபாவில் யாழ்ப்பாணம் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக கடற்றொழில் உபகரணங்கள் விநியோகம் மேற்கொள்வதற்காக ஒரு கட்சியினர் முயற்சித்தனர். அதற்கு முயற்சித்த அரசியல்வாதி தற்போது ஒரு வேட்பாளராக உள்ளார்.

இந்த உதவிப் பொருள்களை விநியோகிக்க பிரதேச செயலாளர் கோரிய அனுமதிக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் அனுமதி வழங்கியுள்ளார். இதனால் அவர் மோசடியாகச் செயற்பட்டுள்ளார் என உதவித் தேர்தல் அதிகாரி நேற்றுப் பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

உதவித் தேர்தல் அதிகாரி கருணாநிதியின் குற்றச்சாட்டு தொடர்பாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான ரட்ணஜீவன் ஹூல், உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் ஆகியோர் கருத்து தெரிவிக்கையில்–

இந்த நடவடிக்கையானது 6ஆம் மாதம் ஆரம்பத்தில் தேர்தல் நடக்குமா என்ற ஐயப்பாடு இருந்த காலத்தில் பிரதேச செயலாளர் விண்ணப்பித்த போது அனுமதிக்கப்பட்டது. அது ஒரு மீனவ அமைப்பிடமே வழங்கப்பட்டதாகவும் அந்த அமைப்பு இன்னுமோர் அமைச்சின் கீழ் வருவதால் அமைச்சின் கூற்றின் பிரகாரம் அவை விநியோகிக்கப்பட்டன எனவும் கூறப்படுகின்றது.

இந்த விடயத்தை ஆராய்ந்து ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்க இதே கருணாநிதி உட்பட மூவர் நியமிக்கப்பட்டபோதும் விசாரணை இன்னும் முடியவில்லை. ஆணைக் குழுவுக்கு எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கு இடையில் இவ்விடயத்தில் பெரும் தவறு நடந்திருப்பதான ஒரு மாறுபட்ட கருத்தை அவர் ஏன் இன்று அவசரமாகப் பொது வெளியில் சென்று தெரிவித்தாரோ எமக்கு புரியவில்லை – என்றனர்.

# தவறாது வாக்களிக்கக் கோருகிறார் பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித்



இலங்கையின் அனைத்து பிரஜைகளையும் தவறாது வாக்களிக்குமாறு கொழும்பு பேராயர் கர்தினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த வருட தேர்தல் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்பதால் தேர்தலில் வாக்களிக்கவேண்டியது அனைத்து பிரஜைகளினதும் கடமை. இந்தத் தேர்தல் எங்கள் தேசத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் தீர்மானங்களை புதிய நாடாளுமன்றம் மேற்கொள்ளும். அதனால் எனக்கும் உங்களுக்கும் இந்த தேர்தலில் பங்கெடுக்கவேண்டிய கடமை உள்ளது.

ஒவ்வொரு பிரஜையையும் தனது கடமையை நிறைவேற்றுமாறும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு காலையிலேயே செல்லுமாறும் பாதுகாப்பு தரப்பினர் மற்றும் தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள ஆலோசனைகளை பின்பற்றுமாறும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கொவிட் – 19 பரவுவதை தடுப்பதற்காக சுகாதார அதிகாரிகள் விடுத்த வேண்டுகோள்களை பின்பற்ற வேண்டும். உரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளது போன்று தங்கள் கடமைகளை நிறைவேற்றுவது அனைத்து பிரஜைகளினதும் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய தீர்மானங்களை எடுப்பதிலும் நாட்டை வளத்தை நோக்கி கொண்டு செல்வதிலும் ஆகஸ்ட் 5ஆம் திகதி நீங்கள் எடுக்கவுள்ள தீர்மானம் மிகவும் முக்கியமானது.

இதன் காரணமாக நீங்கள் கடமைகளை நிறைவேற்றாமல் விடாதீர்கள். வாக்களிக்கும் உங்கள் கடமையை நீங்கள் நிறைவேற்றாவிட்டால் நாடு எதிர்நோக்க கூடிய ஏதாவது பாதகமான நிலைக்கு நீங்களும் பொறுப்பாளியாவீர்கள். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சகல மதுபானசாலைகளும் இரண்டு நாள்கள் மூடப்படும்

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் இன்றும் நாளையும் மூடப்படும் என மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இத்தீர்மானத்திற்கு மாறாகச் செயற்படும் மதுபானசாலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் விற்பனை நிலைய அனுமதி பத்திரமும் இரத்து செய்யப்படும் என்றும் அத்திணைக்களம் எச்சரித்துள்ளது.

அத்தோடு, இவ்விடயம் தொடர்பான முறைப்பாடுகளை பொதுமக்கள் 1913 எனும் இலக்கத்தின் ஊடாக முன்வைக்க முடியும் எனவும் மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இன்று பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், பாதுகாப்பினை பலப்படுத்த உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வன்முறை சம்பவங்கள் தோற்றம் பெறுவதை தவிர்ப்பதற்கு இரண்டு நாட்கள் மதுபானசாலைகள் மூடப்பட வேண்டும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மதுவரி திணைக்களத்துக்கு எழுத்து மூலமாக அறிவித்ததை தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல்: ஆசனப் பங்கீடு எங்ஙனம்?

பஞ்சாட்சரம் ஜோன் டிலக்சன்



**உறுப்பினர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றார்கள்?**

1978 ஆம் ஆண்டிற்குப் பின்னர் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் நடைபெற்று வருகின்றது. இம்முறை நடைபெறப்போகின்ற தேர்தல் 9 ஆவது விகிதாசாரத் தேர்தலாக அமைகின்றது. 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் போனஸ் இடங்கள் வழங்கப்படும். மொத்தமாக 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்தும் 196 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். இவ்வாறு நாடாளுமன்றத்திற்கு 196 பேர் வாக்காளர்களின் மூலமும், 29 பேர் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் நாடளாவிய ரீதியில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் மொத்தமாக 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**மாவட்ட அடிப்படையில் ஆசனங்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றது?**

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற கட்சிகளின் அடிப்படையில் ஆசனங்கள் பிரித்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 7 ஆசனங்கள் தேர்தல் மூலம் வழங்கப்படுகின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்தவகையில் அந்த மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் 400,000 ஆகும். கட்சி A 140,000 வாக்குகளையும், கட்சி B 110,000 வாக்குகயையும், கட்சி C 52,500 வாக்குகளையும், கட்சி D 30,000 வாக்குகளையும், கட்சி E 27,500 வாக்குகளையும், கட்சி F 17,500 வாக்குகளையும், கட்சி E 12,500 வாக்குகளையும், கட்சி G 10,000 வாக்குகளையும் பெற்றுள்ளது என்று வைத்துக் கொண்டால், அந்த மாவட்டத்திற்கான முதலாவது ஆசனம் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு வழங்கப்படும். அதாவது கட்சி A இற்கு வழங்கப்படும். இது போனஸ் ஆசனம் என்று அழைக்கப்படும்.

> வடமாகாணத்தில் 05 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப் படுகின்றன. யாழ் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) தேர்தல் மாவட்டத்திலிருந்து 07 உறுப்பினர்களும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இருந்து (மன்னார், முல்லைத்தீவு, வவுனியா) 06 உறுப்பினர்களுமாக மொத்தம் 13 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவ்வாறு முதலாவது ஆசனம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, 5 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப்பெற்ற கட்சிகள் கணக்கில் எடுத்துக்கொள் எப்படாது. (400,000X0.05 = 20,000) ஆகவே 20,000க்குகுறைவானவாக்குகளைப்பெற்ற கட்சி F, கட்சி G, கட்சி H போன்றவை கணக்கில் எடுக்கப்படாது. போனஸ் ஆசனத்தை விடுத்து மீதமுள்ளது 6 ஆசனமாகும். இந்த 6 ஆசனங்களும் கட்சிகள் பெற்ற வாக்குகள் அடிப்படையில் பிரித்து வழங்கப்படும். கணக்கில் எடுக்கப்படாத கட்சியினை விடுத்து (கட்சி F, கட்சி G, கட்சி H) ஏனைய கட்சிகளின் வாக்குள் (கட்சி A, கட்சி B, கட்சி C, கட்சி D, கட்சி E) கூட்டப்பட்டு அது 6 இனால் பிரிக்கப்படும். அதாவது 140,000, 110,000, 52,500, 30,000, 27,500 வாக்குகளைக்கூட்டினால் 360,000 வாக்குகள் வரும்.

இந்த 360,000 வாக்குகள் 6 இனால் பிரிக்கப்பட்டால் 60,000 வாக்கு வரும். ஒரு ஆசனத்திற்குத் 60,000 வாக்குகள் தேவை. இதன்படி முதல் சுற்றில் கட்சி A இற்கு 140,000 வாக்குகள் இருப்பதால் 2 ஆசனங்கள் வழங்கப்பட்டு, இரண்டாம் சுற்று ஆசனப்பகிர்விற்காக மீதமுள்ள 20,000 வாக்குகள் அக்கட்சியிடம் இருக்கும். இதேபோன்று கட்சி B 110,000 வாக்குகளைப் பெற்றிருப்பதால் ஒரு ஆசனம் வழங்கப்பட்டு, இரண்டாம் சுற்று ஆசனப்பகிர்விற்காக மீதமுள்ள 50,000 வாக்குகள் அக்கட்சியிடம் இருக்கும். ஏனைய கட்சிC, கட்சிD, கட்சிE ஆகியவை 60,000 வாக்குகளைப் பெறாத காரணத்தினால் முதல் சுற்றில் எந்தவிதமான ஆசனமும் வழங்கப்படாது.

இதுவரைக்கும் வழங்கப்பட்ட ஆசனங்களின் அடிப்படையில் கட்சி A 3 ஆசனங்களையும் (போனஸ் ஆசனம் 1) கட்சி B 1 ஆசனத்தையும் பெற்றுக்கொள்ளும். இரண்டாம் சுற்று ஆசனப்பகிர்வில் தற்போது கட்சி A 20,000 வாக்குகளையும், கட்சி B 50,000 வாக்குகளையும், கட்சி C 52,500 வாக்குகளையும், கட்சி E 30,000 வாக்குகளையும், கட்சி F 27,500 வாக்குகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இதனடிப்படையில் இரண்டாம்சுற்றுஆசனப்பகிர்வில்கூடுதலானவாக்குகளைப் பெற்ற கட்சி அடிப்படையில் மீதமுள்ள 3 ஆசனங்களும் பகிரப்படும். இதனடிப்படையில் கட்சி C, கட்சி B, கட்சிE ஆகிய மூன்று கட்சிகளுக்கும் தலா ஒரு ஆசனம் வீதம் வழங்கப்படும். இறுதி முடி வின்படி பார்த்தால் கட்சி1 3 ஆசனங்களையும், கட்சி B 2 ஆசனங்களையும், கட்சி C 1ஆசனத்தையும், கட்சி F 1 ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளும். கட்சி F க்கு எந்தவிதமான ஆசனமும் வழங்கப்படாது. இவ் வாறுதான் ஆசனப்பகிர்வு இடம்பெறுகின்றது.

**மாகாண, மற்றும் மாவட்ட அடிப்படையில் ஆசனப்பகிர்வு**

நாட்டிலுள்ள 25 நிர்வாக மாவட்டங்கள் தேர்தலின் பொருட்டு 22 தேர்தல் மாவட்டங்களாக வரையறுக்கப்படுகின்றன. இது எவ்வாறெனில் யாழ்ப் பாணம், கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்கள் ஒரு தேர்தல் மாவட்டமா கவும், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்கள் வன்னி தேர்தல் மாவட்டமாகவும் இணைக் கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலுமிருந்து தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறை செய்யப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் 05 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. யாழ் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) தேர்தல் மாவட்டத்திலிருந்து 07 உறுப்பினர்களும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இருந்து (மன்னார், முல்லைத்தீவு, வவுனியா) 06 உறுப்பினர்களுமாக மொத்தம் 13 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 03 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்திலிருந்து 04 உறுப்பினர்களும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 05 உறுப்பினர்களும், அம்பாறை (திஹாமடுல்ல) மாவட்டத்திலிருந்து 07 உறுப்பினர்களுமாக மொத்தம் 16 உறுப் பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப் படுகின்றனர்.

மேல் மாகாணத்தினை எடுத்துக்கொண்டால் 03 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. கொழும்பு மாவட்டத்திலிருந்து 19 உறுப்பினர்களும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 18 உறுப்பினர்களும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 10 உறுப்பினர்களுமாக மொத்தம் 47 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்றனர்.

தென் மாகாணத்தில் 03 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. காலி மாவட்டத்திலிருந்து 09 உறுப்பினர்களும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 07 உறுப்பினர்களும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 07 உறுப்பினர்களுமாக மொத்தம் 23 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மத்திய மாகாணத்தில் 03 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றது. கண்டி மாவட்டத் திலிருந்து 12 உறுப்பினர்களும், மாத்தளை மாவட்டத்திலிருந்து 05 உறுப்பினர்களும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 08 உறுப்பினர்களுமாக மொத்தம் 25 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். வட மத்திய மாகாணத்தில் 02 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து 09 உறுப்பினர்களும், பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 05 உறுப் பினர்களுமாக மொத்தம் 14 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

வட மேல் மாகாணத்தில் 02 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. குருநாகல் மாவட்டத்திலிருந்து 15 உறுப்பி னர்களும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 08 உறுப்பினர்களுமாக மொத்தம் 23 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஊவா மாகாணத்தில் 02 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. பதுளை மாவட்டத்திலிருந்து 09 உறுப்பினர்களும், மொனராகலை மாவட்டத்திலிருந்து 06 உறுப்பினர்களுமாக மொத்தம் 15 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

சப்பிரகமுவ மாகாணத்தில் 02 நிர்வாக மாவட்டங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 11 உறுப்பினர்களும், கேகாலை மாவட்டத்திலிருந்து 09 உறுப்பினர்களுமாக மொத்தம் 20 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர்.

| இல | மாகாணங்கள் | தேர்தல் மாவட்டங்கள் | உறுப்பினர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 07 | 13 |
| | | வன்னி | 06 | |
| 02 | கிழக்கு மாகாணம் | திருகோணாமலை | 04 | 16 |
| | | மட்டக்களப்பு | 05 | |
| | | அம்பாறை (திஹாமடுல்ல) | 07 | |
| 03 | மேல் மாகாணம் | கொழும்பு | 19 | 47 |
| | | கம்பஹா | 18 | |
| | | களுத்துறை | 10 | |
| 04 | தென் மாகாணம் | காலி | 09 | 23 |
| | | மாத்தறை | 07 | |
| | | அம்பாந்தோட்டை | 07 | |
| 05 | மத்திய மாகாணம் | கண்டி | 12 | 25 |
| | | நுவரெலியா | 08 | |
| | | மாத்தளை | 05 | |
| 06 | வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 09 | 14 |
| | | பொலன்னறுவை | 05 | |
| 07 | வடமேல் மாகாணம் | குருநாகல் | 15 | 23 |
| | | புத்தளம் | 08 | |
| 08 | ஊவா மாகாணம் | பதுளை | 09 | 15 |
| | | மொனராகலை | 06 | |
| 09 | சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 11 | 20 |
| | | கேகாலை | 09 | |

வாக்காளர்கள் மூலம் 196 பேரும், தேசிய பட்டியல் மூலம் 29 பேருமாக மொத்தம் 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள், ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் பல இழுபறிகளுக்கு மத்தியில் காணப்பட்டது. தற்போது சரியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு நாளை (05.08.2020) அது நடைபெறவுள்ளது.

இத் தேர்தல் அரசியல் சிக்கலுக்குக் கிடைத்த பெரு வெற்றியாக அனைவராலும் பார்க்கப்படுகின்றது. நடைபெறுகின்ற தேர்தலில் சரியான சமூக இடைவெளியினை பேணிக் கொண்டு எமது வாக்களிக்கும் உரிமையினை சரியான முறையில் பயன்படுத்துவது நாட்டு மக்களாகிய நமக்கு இருக்கும் முக்கிய கடமையாகும். நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படக்கூடிய சிறந்த தலைவர்களைத் தெரிவு செய்வது எமக்கு இருக்கின்ற பாரிய பொறுப்பாகும். எந்தவொரு வாக்கும் நிராகரிக்கப்படாமல் வாக்குச்சீட்டைச் சரியான முறையில் பயன்படுத்தி வாக்களித்து ஆளுமையுள்ள அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்து ஆசனங்களை பெற்றுக் கொடுத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புவோம்.

சமூகவியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

# அனுராதபுரவாசிகளின் இரத்தத்தில் ஈயமாம்!

## அளவுக்கு அதிகமாக உள்ளது



அனுராதபுரம், ஓக. 05

அனுராதபுரம்மாவட்டத்தில்உள்ள கிராம மக்களின் குருதியில் அளவுக்கு அதிகமாக ஈயம் அடங்கி இருப்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாடு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் மருந்துவர் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.

இந்த மக்களின் குருதியில் ஒரு டெசிலீடருக்கு 3.9 மைக்ரோ கிராம் அளவில் ஈயம் இருப்பதாகப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக இந்த மக்களுக்கு சுவாச குழாய் உபாதை, சிறுநீரகம் செயலிழப்பு, உயர் இரத்த அழுத்தம் போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன.

குருதியில் ஈயம் காணப்படுவது காரணமாக பிள்ளைகளின் அறிவு மட்டமும் குறைவடையும்.

உணவு, குடிநீரில் உள்ள ஈயமே இவ்வாறு குருதியில் கலந்துள் ளது என ஆய்வு உறுதிப்படுத்தியுள்ளது.

அனுராதபுரம்மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களைத் தெரிவு செய்து இந்த பரிசோதனை நடத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நபர்களைத்தெரிவுசெய்து இந்தபரிசோ தனைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குளவிக்கூட்டுக்குப் பயந்து வாக்குச் சாவடி இடமாற்றம்

வவுனியா, ஓக. 05

ஈரற்பெரியகுளம் பரகும் மகா வித்தியாலத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையத்தில் குளவிக்கூடு அமைந்துள்ளமையால், பாதுகாப்பு கருதி, அந்த வாக்களிப்பு நிலையம் இரட்டை கலாசாரமண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## மொட்டுக் கட்சி வென்றால் பிரதமர் உடன் பதவியேற்பு

கொழும்பு, ஓக. 05

பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்றால் ஓகஸ்ட் 7 அல்லது 8 திகதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட உடனேயே புதிய பிரதமர் பதவியேற்பார் என்று அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெற்றிபெற்றதும் முதலில் பிரதமர் பதவியேற்பார் என்றும் பின்னர், அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வாக்காளர் அட்டைகளை விலைக்கு வாங்க முயற்சி

களுத்துறை – பேருவளையில் வாக்காளர் அட்டைகளை 5000 ரூபா கொடுத்து வாங்க முயற்சித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் வந்த மோட்டார் வாகனம் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேக நபர்கள் தப்பிச் சென் றுள்ளனர் என்றும் அவர்களை கைது செய்வதற்கான பொலிஸ் விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளும் இம்முறை பொதுத் தேர்தல் களத்தில்

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முன்னாள் எம்.பிக்கள் 208 பேர் போட்டியிடுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகள் இருவர், முன்னாள் பிரதமர், முன்னாள் ஜனாதிபதிகளின் இரு புதல்வர்கள் ஆகியோரும் இதில் உள்ளடங்குகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிகளாவர் என்பதுடன், சஜித் பிரேமதாச, நாமல் ராஜபக்ஷ ஆகியோர் முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்களாவர். ரணில் விக்கிரமசிங்க முன்னாள் பிரதமராவார்.

அத்துடன், முன்னாள் பிரதமர்களான தி.மு.ஜயரட்ன, ரட்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரின் புதல்வர்களும் மொட்டு கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றனர்.

8ஆவது நாடாளுமன்றத்தில் சபாநாயகராக பதவிவகித்த கரு ஜயசூரிய இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. தேசியப்பட்டியலிலும் அவர் இடம்பெறவில்லை.

பிரதி சபாநாயகராக செயற்பட்ட திலங்க சுமதிபால ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

குழுக்களின் பிரதி தவிசாளராக செயற்பட்ட செல்வம் அடைக்கலநாதன் இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் வன்னி மாவட்டத்தில் களமிறங்கியுள்ளார்.

அதே பதவியை முன்னர் வகித்த சந்திரகுமார், ஜே.வி.பியின் சந்திரசேகரன் ஆகியோர் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறேன்.




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான**

## மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி – 2020

### போட்டி விதிகள்

1. இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கானதாகும். தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு பற்ற முடியும்.
2. 03.08.2020 முதல் எதிர்வரும் 18.08.2020 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விபரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதும் மாணவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விபரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 15,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 10,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 5,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 22.08.2020 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. ஈழத்தின் சைவ எழு ஞாயிறு எனப்படும் சமயப் பெரியார் யார்?**

..............................................................................................

**2. யாழ்ப்பாண வரலாற்று ஆய்வாளர்கள் முதல் நூலாகக் கொள்ளும் நூல்களில் ஒன்றான கைலாயமாலை யாரால் பாடப்பட்டது?**

..............................................................................................

**3. உலகின் புகழ்பூத்த ஆயிரத்தெட்டுச் சிவாலயங்களில் ஒன்றாக, மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற யாழ்ப்பாணத்துச் சிவாலயம் எது?**

..............................................................................................

**4. இந்து சமயத்தில் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நெறி வைணவம் என்படுவது போல தமிழக் கடவுள் முருகனை வழிபடும் சமய நெறி எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

..............................................................................................

**5. உலகப் பெருமஞ்சம் எனப்படும் மஞ்சத்தைக் கொண்ட யாழ்ப்பாணத்து முருகன் ஆலயம் எது?**

..............................................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 20.08.2020 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் – பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

03

பங்குபற்றுபவர்களின் விபரங்கள்:-

1. முழுப் பெயர் :..............................................................
2. பிறந்த திகதி :..............................................................
3. கல்வி கற்கும் தரம் :......................................................
4. பாடசாலை :..................................................................

..........................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு சிறைகளின் பாதுகாப்பு விசேட அதிரடிப்படையினர் வசம்




கொழும்பு, ஒக. 05

கொழும்பு சிறைச்சாலைகளின் பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை ஈடுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த விடயம் குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சு வெளியிட வேண்டுமென சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய கோரிக்கை விடுத்துள்ளார்.

அதாவது வெலிக்கடை, மகசின், கொழும்பு மற்றும் ரிமான்ட் சிறைச்சாலைகள் மற்றும் பெண்கள் சிறைப் பிரிவுகள் ஆகியவற்றுக்கு இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று புஸ்ஸ மற்றும் அகுனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பொலிஸ் விசேட அதிரடிப்படையை ஈடுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள நடாளுமன்ற தேர்தலுக்காக பாதுகாப்பு கடமைகளில் 69,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தலில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சிவில் பாதுகாப்பு படைப் பிரிவைச் சேர்ந்த 10ஆயிரத்து 500 பேர் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வாக்களிப்பு நிலையங்களின் அருகே வாரி இறைக்கப்படும் பிட் துண்டுகள்



(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம்,ஒக.05

யாழ்ப்பாணத்தில் வாக்குச் சாவடிகளை அண்மித்த வீதிகளில் வேட்பாளர்களின் துண்டுப்பிரசுரங்கள் பரவலாக விசிறப்பட்டுள்ளன.

தேர்தல் பிரசாரங்கள் கடந்த இரண்டாம் திகதியுடன் மேற்கொள்ளக் கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில் நேற்று இரவோடு இரவாக வாக்குச் சாவடிகளுக்கு அருகில் உள்ள வீதிகளில் வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள், கட்சிச் சின்னங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள், அட்டைகள் என்பன தாராளமாக விசிறப்பட்டுள்ளன.

திட்டமிட்ட வகையில் தேர்தல் விதிமுறைகளை மீறி இவ்வாறு வீதிகளில் துண்டுப்பிரசுரங்கள் விசிறியுள்ளமை தொடர்பில் பொது மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

# நாசாவால் வெளியிடப்பட்ட இலங்கையின் அரிய படம்



சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ஜுலை 24 அன்று எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் பிரகாசமான ஒளிரும் தெற்கு முனையும் அழகாகத் தென்படும் காட்சியை நாசா வெளியிட்டுள்ளது.

நாசா விண்வெளி வீரர்களான பொப் பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இரண்டு மாதங்கள் கழித்த பின்னர் ஒகஸ்ட் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூமியை வந்தடைந்தனர்.

ஆனால் நாசா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் என்ற விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்கள் நிறுவனம், ஏற்கனவே மற்றொரு குழுவினரை அடுத்த மாதம் சுற்றுப்பாதையில் செலுத்த திட்டமிட்டுள்ளன.

முதன்முதலில் மனிதர்களால் இயக்கப்பட்ட விண்வெளி ஆய்வு தொழில்நுட்பங்கள் நிறுவனத்தின் பயணத்தின் போது பெஹன்கென் மற்றும் டக் ஹர்லி ஆகியோரால் எடுக்கப்பட்ட சிறந்த புகைப்படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

அதில் ஜுலை 24 அன்று சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படமொன்றில் இலங்கையும், இந்தியாவின் பிரகாசமான ஒளிரும் தெற்கு முனையும் காட்டப்பட்டுள்ளன. விண்மீன்கள் நிறைந்த வானமும் வளிமண்டல பளபளப்பும் பூமியின் அடிவானத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2020 இல் வெளியிடப்பெற்றது.